S. Jothi

SLFI

# தொழிற் சங்க கட்டளைச் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Jothi

இமக ஆய்வுத் துணைநூல் தொடர் இலக்கம் 3,

# தொழிற் சங்க கட்டளைச் சட்டம்

அத்தியாயம் 138

இலங்கை மன்றக் கல்லூரி
100, சுதந்திர சதுக்கம்
கொழும்பு — 7. இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பிரசுரம் 1983

பின்வருவனவற்றின் தொகுப்பாகும்

தொழிற் சங்க கட்டளைச் சட்டம் — 1935ன் 14ம் இலக்கம்
தொழிற் சங்க கட்டளைச் சட்டம் — 1946ன் 03ம் இலக்கம்
தொழிற் சங்க திருத்தச் சட்டம் — 1948ன் 15ம் இலக்கம்
தொழிற் சங்க திருத்தச் சட்டம் — 1958ன் 18ம் இலக்கம்
தொழிற் சங்க திருத்தச் சட்டம் — 1970ன் 24ம் இலக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 138

## தொழிற் சங்கங்கள்

தொழிற் சங்கங்களைப் பதிவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம்.

கட்டளைச் சட் இல. 1935இன் 1946இ

(நவம்பர் 1, 1935)

### பாகம் 1

### முதனிலையானவை

1 இக்கட்டளைச்சட்டம் தொழிற் சங்கக் கட்டளைச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்

2. இக்கட்டளைச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினலன்றி — பொருள்

"நிறைவேற்றுநர் அல்லது நிறைவேற்று உத்தியோகத்தர்" என்பது, ஒரு தொழிற் சங்கத்தின் அலுவல்களினது முகாமை பொறுப்பிக்கப்பட்டுள்ளதான ஒரு குழு, அக்குழு எப்பெயரினலழைக்கப்படுவதாயிருப்பினும் அக்குழு என்று பொருளாவதோடு ஏதேனும் தொழிற் சங்கத்தின் தலைவரையும், செயலாளரையும், பொருளாளரையும் உள்ளடக்கும்;

"கதவடைப்பு" என்பது, தன்னல் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களை அத்தொழிலின் அல்லது அத்தொழில் சம்பந்தமான நியதிகளை அல்லது நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தும் நோக்கத்தோடு, அல்லது தொழில்தருநர் வேருெருவருக்கு அவரால் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களைத் தொழிலின், அல்லது தொழில் சம்பந்தமான நியதிகளை அல்லது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த உதவிபுரியும் நோக்கத்தோடு ஒரு வேலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலத்தை மூடிவைத்தல் அல்லது வேலையை இடைநிறுத்துவதில், அல்லது ஒரு பிணக்கின் விளைவாக, அவரால் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களைத் தொடர்ந்து தொழிலிமர்த்தத் தொழில்தருநர் ஒருவர் மறுத்தல் என்று பொருளாகும்;

"உத்தியோகத்தர்" என்பது, ஒரு தொழிற் சங்கம் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் போது, அதன் நிறைவேற்று குழுவின் உறுப்பினர் எவரையும் உள்ளடக்கும்; ஆனால் கணக்காய்வாளர் ஒருவரை உள்ளடக்காது;

"விதிக்கப்பட்ட" என்பது, இக்கட்டளைச்சட்டத்தின் 52ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் மூலம் விதிக்கப்பட்ட என்று பொருளாகும்;

"இடப்பரப்பு" என்பது, 7ஆம் பிரிவின் கீழ்ப் பதிவாளரால் பேணப்பட்டுவரும் தொழிற் சங்கங்களின் இடாப்பு எனப் பொருளாகும்;

"பதியப்பட்ட அலுவலகம்" என்பது, ஒரு தொழிற் சங்கத்தின் தலைமை அலுவலகமென இக்கட்டளைச்சட்டத்தின் கீழ்ப் பதியப்பட்ட அத்தொழிற் சங்கத் தலைமை அலுவலகமென்று பொருளாகும்;

"பதியப்பட்ட தொழிற் சங்கம்" என்பது, இக்கட்டளைச்சட்டத்தின் கீழ்ப் பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கமென்று பொருளாகும்;

"பதிவாளர்" என்பது, தொழிற் சங்கப் பதிவாளராக அல்லது அவ்வாறு செயலாற்ற பெயர்மூலம் அல்லது பதவிமூலம், 3ஆம் பிரிவின் கீழ் அப்போதைக்கு நியமிக்கப்படும் ஆள் என்று பொருள்படுவதோடு தொழிற் சங்க உதவிப் பதிவாளராக அல்லது அவ்வாறு செயலாற்ற 4ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படும் ஆள் எவரையும் உள்ளடக்கும்;

"ஒழுங்குவிதி" என்பது, 52ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி என்று பொருளாகும்;

"வேலைநிறுத்தம்" என்பது, ஏதாவது தொழிலில் அல்லது கைத்தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்கள் குழு, வேலை செய்தலைக் கூட்டாகச் சேர்ந்து நிறுத்துதல், அல்லது அவ்விதம் தொழிலுக்கமர்த்தப் பட்டிருக்கும் அல்லது தொழிலுக்கமர்த்தப் பட்ட ஏதாவது தொகையினரான ஆட்கள் தொடர்ந்து வேலைசெய்ய அல்லது தொழில் ஏற்க ஒருமுகமாக மறுத்தல் அல்லது ஒரு பொது நோக்கில் மறுத்தல் என்று பொருளாகும்;

"தொழிற் பிணக்கு" என்பது, எவரதும் தொழிலுக்கமர்த்துதல் அல்லது தொழிலுக்கமர்த்தாதுவிடுதல், அல்லது தொழிலுக்கமர்த்தும் நியதிகள் அல்லது தொழில் நிபந்தனைகள் தொடர்பாக, தொழில்தருநருக்கும் வேலையாளர்களுக்குமிடையில் அல்லது வேலையாளர்களுக்கும் வேலையாளர்களுக்குமிடையில் எழும் ஏதாவது பிணக்கு அல்லது அபிப்பிராயபேதம் என்று பொருளாகும்;

"தொழிற் சங்கம்" என்பது, பின்வரும் குறிக்கோள்களுள் ஒன்றினையேனும் அல்லது அதற்கு மேற்பட்டவற்றையேனும் அதன் குறிக்கோள்களுளொன்றாகக் கொண்ட வேலையாட்களின் அல்லது தொழில்தருநர்களின் தற்காலிகமான அல்லது நிரந்தரமான ஏதேனும் கழகம் அல்லது கூட்டமெனப் பொருள்படுவதோடு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களின் ஏதேனும் சம்மேளனத்தையும் உள்ளடக்கும்:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) வேலையாட்களுக்கும் தொழில்தருநர் களுக்குமிடையிலுள்ள அல்லது வேலை யாட்களுக்குமிடையிலுள்ள அல்லது தொழில்தருநர்களுக்கும் தொழில்தரு நர்களுக்குமிடையிலுள்ள உறவுகளை ஒழுங்குபடுத்துதல்; அல்லது

(ஆ) ஏதேனும் தொழிலை அல்லது வியா பாரத்தை நடாத்துவதில் கட்டுப்பாடு செய்யும் நிபந்தனைகளை விதித்தல் அல்லது

(இ) தொழிற் பிணக்குகளில் ஒன்றில் வேலையாட்களுக்காக அல்லது தொழில் தருநர்களுக்காகப் பிரதிநிதித்துவம் வகித்தல்; அல்லது

(ஈ) ஏதாவதொரு தொழிலில் அல்லது கைத்தொழிலில் வேலைநிறுத்தத்துக் கான அல்லது கதவடைப்புக்கான பண வசதியை மேம்படுத்தல் அல்லது ஒழுங் கமைத்தல், அல்லது ஒரு வேலை நிறுத்தத்தின்பொழுது அல்லது கதவடைப்பின்பொழுது அதன் உறுப் பினர்களுக்குப் பணத்துக்கு அல்லது வேறெவையேனும் நன்மைகளுக்கு ஏற்பாடுசெய்தல்;

"வேலையாளர்" என்பது, ஏதேனும் தரத் தில் தொழில்தருநர் ஒருவருடன் ஒப்பந்த மொன்றைச் செய்துகொண்டவரான அல் லது ஒப்பந்தமொன்றின்கீழ் வேலைசெய்பவ ரான, (அவ்வொப்பந்தம் வெளிப்படையான தாயினுஞ்சரி அல்லது உட்கிடையானதா யினுஞ்சரி, வாய்மூலமானதாயினுஞ்சரி அல்லது எழுத்திலானதாயினுஞ்சரி, அத் துடன் அவ்வொப்பந்தம் சேவை ஒப்பந்த மாயினுஞ்சரி அல்லது பயிலுநர் தன்மை யானதாயினுஞ்சரி, அல்லது ஏதேனும் வேலையை அல்லது தொழிலை நிறைவேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கான தனிப்பட்ட ஒப்பந்தமொன்று ருயினுஞ்சரி), எவரேனும் ஆள் எனப் பொருளாகும் என்பதுடன், அத்தகைய எதேனும் ஒப்பந்தத்தின்கீழ் சாதாரண மாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் ஆளை, அத்தகைய ஆள் குறிப்பிட்ட ஏதே னும் நேரத்தில் தொழிலில் இருப்பவ ராயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, அவ ரையும் உள்ளடக்கும்.

## பாகம் 11

## பதிவாளரினதும் ஏனைய உத்தியோத்தர்களினதும் நியமனம்.

3. இக்கட்டளைச்சட்டத்தின்கீழான பதிவா ளர் என்ற தன்மையில் அவருக்கு ஒதுக்கிவிடப்படும் கடமைகளையும் பணிகளையும் முறையாகப் புரிவதற் குப் பொறுப்பாளியாகவிருக்கவேண்டிய தொழிற் சங்கப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படலாம். பதிவாளரின் நியமனம்.

4. இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக் கென தொழிற் சங்க உதவிப் பதிவாளர் ஒருவ ரேனும் அல்லது அதிகமானோரேனும், அத்துடன் காலத்துக்குக்காலம் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உத்தியோகத்தர்களேனும் நிய மிக்கப்படலாம். உதவிப் பதிவாளர் களையும் வேறு உத்தியோகத்தர் களையும் நியமித்தல்.

5. இக்கட்டளைச்சட்டத்தின் 3ஆம், 4ஆம் பிரிவு களின்கீழ் நியமிக்கப்படுபவர்களான எல்லா உத்தி யோகத்தர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுவர்.. உத்தியோகத்தர் அனைவரும் பகிரங்க சேவையாளர்களா கக் கருதப்படுதல்.

6. இக்கட்டளைச்சட்டத்தின்கீழ்ச் செயலாற்றும் எப்பகிரங்க சேவையாளனுக்குமெதிராக, அவரினால் நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட அல்லது செய் யாதுவிடப்பட்ட எதற்காகவும் குற்றவழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது. பகிரங்க சேவை யாளர் பாதுகாக் கப்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் 111

### பதிவு

தொழிற் சங்கங்களின் இடாப்பு.

7. (1) பதிப்பப்பட்ட ஏதேனும் தொழிற் சங்கம் தொடர்பிலான விதிக்கப்பட்ட விபரங்களும், அதன் பெயரில், விதிகளில், உத்தியோகத்தர்களில் அல்லது அதன் நிறைவேற்று குழுவில் அல்லது அதன் பதியப்பட்ட அலுவலகத்தின் இடவமைதியில் காலத்துக்குக் காலம் செய்யப்படக்கூடிய எவையேனும் திருத்தங்களும் அல்லது மாற்றங்களும், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் அதன்கண் பதியப்பட வேண்டுமென தேவைப்படக்கூடிய ஏனைய அத்தகைய எல்லாக்கருமங்களும் அதிலே பதியப்படவேண்டியதான தொழிற் சங்க இடாப்பொன்றை விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பதிவாளர் வைத்துப் பேணி வருதல் வேண்டும்.

(2) அந்த இடாப்பிலுள்ள ஏதேனும் பதிவினது சான்றுப்படுத்தப்பட்ட பிரதி அத்தகைய சான்றுபடுத்தப்பட்ட பிரதியின் தேதியில் உள்ளவாறான அதன்கண் குறித்துரைக்கப்பட்டிருக்கும் நிகழ்வுகளுக்கு முடிவான எண்பிப்பாகும்.

பதிவு செய்யவேண்டிய அவசியம்.

8. (1) இக்கட்டளைச்சட்டம் தொடங்குந் தேதிக்கு முன்னர் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு தொழிற் சங்கமும் அத்தேதியிலிருந்து கணக்கிடப்படும் மூன்று மாத காலப்பகுதிக்குள், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ்ப் பதியப்படுவதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) இக்கட்டளைச்சட்டந் தொடங்கிய பின்னர் தாபிக்கப்படும் ஒவ்வொரு தொழிற் சங்கமும், அது அவ்விதம் தாபிக்கப்படும் தேதியிலிருந்து கணக்கிடப்படும் மூன்று மாத காலப்பகுதிக்குள் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ்ப் பதியப்படுவதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) முதலாம், (2)ஆம் உட்பிரிவுகளில் முறையே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளின் அளவைப் பதிவாளர், தகுமென எண்ணினுல், காலத்துக்குக் காலம் நீட்டலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், மொத்தமாக ஆறு மாத காலப் பரிதியை விஞ்சக்கூடியதாக, எந்தச் சந்தர்ப்பத்திலும், அவ்வகையான இரு காலவெல்லைகளிலெதுவும் அங்ஙனம் நீடிக்கப்படலாகாது.

(4) இக்கட்டளைச்சட்டத்தினது நோக்கங்களுக்காக, 2ஆம் பிரிவில் உள்ள தொழிற் சங்கமொன்றின் வரைவிலக்கணத்தில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களில் ஏதேனுமொன்றனையோ அல்லது அதற்கதிகமானவற்றையோ முன்னேற்றுவதற்கென எவரேனும் வேலையாளர் அல்லது தொழில்தருநர் ஒரு சமூகமாகவேனும் அல்லது கூட்டமாகவேனும் சேர, அல்லது ஒரு சமூகத்தையேனும் அல்லது கூட்டத்தையேனும் உருவாக்க உடன்படும் அந்த முதல் தேதியிலேயே ஒரு தொழிற் சங்கம் தாபிக்கப்பட்டதாகும்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பிக்கத் தவறும் ஏதேனும் தொழிற் சங்கத்திற்கெதிராக வழக்குத் தொடரும் நோக்கத்துக்காக, (4)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேதி பற்றிய எண்பிப்பு இல்லாதபோது அத்தொழிற் சங்கம் தாபிக்கப்பட்ட தேதி

(அ) அத்தொழிற் சங்கத்தின் உறுப்பினரொருவராக எத்தேதியில் எவரேனும் ஆள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அல்லது சேர்த்துக்கொள்ளப்பட்டதாக எண்பிக்கப்படுகிறதோ அத்தேதியாக; அல்லது

(ஆ) இரண்டாம் பிரிவில் உள்ள தொழிற் சங்கமொன்றின் வரைவிலக்கணத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறிக்கோள்களில் ஏதேனுமொன்றினையோ அதற்கதிகமானவற்றையோ முன்னேற்றுவதற்காக, எத்தேதியில் ஏதாவதொரு செயல் அத்தொழிற் சங்கத்தால் செய்யப்பட்டதென எண்பிக்கப்படுகிறதோ அத்தேதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படும்; இன்னும் (அ), (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட இரு தேதிகளும் பற்றிய எண்பிப்பு இடைக்கப்பெறும் ஒரு விடயத்தில், அத் தேதிகளுள் முந்தியதே அத்தொழிற் சங்கம் தாபிக்கப்பட்ட தேதியாகக் கருதப்படும்.

**பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்.**

9. (1) ஒரு தொழிற் சங்கத்தைப் பதிவதற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், பதிவாளருக்கு, விதிக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுவதோடு, அச்சங்கத்தின் உறுப்பினர்கள் ஏழு பேர்களாலேனும் கையொப்பமிடப்படவும் வேண்டும்; அவர்களெல்வரும் அதன் உத்தியோகத்தராயுமிருக்கலாம்.

(2) அவ்வகைப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்திலும் ஒரு ரூபா பெறுமதியான நீக்கஞ் செய்யப்படாத முத்திரைகள் ஓட்டப்பட்டிருக்க வேண்டும்; அவ்விண்ணப்பத்தோடு அத்தொழிற் சங்கத்தின் விதிகளினது பிரதியொன்றும் பின்வரும் விபரங்களடங்கிய ஒரு கூற்றும் சேர்த்தனுப்பப்படவேண்டும் அவை யாவன :—

(அ) அவ்விண்ணப்பத்தைச் செய்யும் உறுப்பினர்களின் பெயர்களும், தொழில்களும், முகவரிகளும்;

(ஆ) அத்தொழிற் சங்கத்தின் பெயரும் அதன் தலைமை அலுவலகத்தின் முகவரியும்; அத்துடன்

(இ) அத்தொழிற் சங்க உத்தியோகத்தரின் உத்தியோகப் பதவிப் பெயர்களும், பெயர்களும், வயதுகளும், முகவரிகளும், செய்தொழில்களும்.

(3) இக்கட்டளைச்சட்டந் தொடங்குமுன்னர் தாபிக்கப்பட்ட ஒரு தொழிற் சங்கம், பதியுமாறு வேண்டிச் செய்யும் அதனது விண்ணப்பத்தோடு அச்சங்கத்தின் இருப்புகள், பொறுப்புகள் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய படிவத்தில் தயாரிக்கப்பட்டதும் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களடங்கியதாகவும் உள்ளதொரு பொதுக் கூற்றையும் பதிவாளருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

10. பதியப்பட விண்ணப்பஞ்செய்யும் ஒரு தொழிற் சங்கம் இக்சட்டவிளச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் அதன்கீழாக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகியிருக்கிறதென்றும், அச்சங்கத்தின் குறிக்கோள்களும் விதிகளும் அமைப்பும், அவ்வேற்பாடுகளிலெதற்கும் முரணானவை அல்லவென்றும், அவை சட்டவிரோதமானவை அல்லவென்றும் அப்பதிவாளர் திருப்திப்பட்டால், விதிக்கப்பட்ட முறையில் அத்தொழிற் சங்கத்தை அவர் பதிவுசெய்தல் வேண்டும்: பதிவுசெய்தல்.

ஆயினும், அத்தகைய தொழிற் சங்கத்தின் குறிக்கோள்களிலெதாவதொன்று சட்டவிரோதமானதாயின், அத்தொழிற் சங்கத்தின் பதிவு வறிதானதாகும்.

11. பத்தாம் பிரிவின்கீழ் ஒரு தொழிற் சங்கத்தைப் பதிவுசெய்ததன் மேல், அத்தொழிற் சங்கத்துக்குப் பதிவுச் சான்றிதழொன்றினை விதிக்கப்பட்ட படிவத்தில் பதிவாளர் வழங்கவேண்டும். அந்தச் சான்றிதழ் நீக்கப்பட்டதென்றோ மீளப்பெறப்பட்டதென்றோ எண்பிக்கப்படினன்றி, அத்தொழிற் சங்கம் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் முறையாகப் பதியப்பட்டிருக்கின்றதென்பதற்கு, எல்லா நோக்கங்களுக்கும் முடிவான சான்றாகும். பதிவுச் சான்றிதழ்.

12. ஏதேனுமொரு விண்ணப்பம் 9ஆம் பிரிவின்ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுகின்றதோவென்று அல்லது அத்தொழிற் சங்கம் இக்கட்டளைச்சட்டத்தின் கீழ்ப் பதிவுபெற உரித்துடையதோவென்று தம்மைத் திருப்திப்படுத்துவதற்காக மேலதிக தகவலை அனுப்பும்படி பதிவாளர் கேட்கலாம். மேலதிக விபரங்களைப் பெறுவதற்கு பதிவாளருக்குள்ள தத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரை மாற்றும்படி கேட்க பதிவாளருக்கு உள்ள தத்துவம்.

**13.** ஒரு தொழிற் சங்கத்தை என்ன பெயரின் கீழ்ப் பதிய உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அப்பெயரானது ஏற்கனவே யுள்ள வேறொரு தொழிற் சங்கம் பதியப்பட்டிருக்கின்ற அதே பெயராகவிருந்தால், அல்லது பதிவாளரின் அபிப்பிராயப்படி, பொதுமக்களை அல்லது அவ்விரு சங்கங்களிலேதாவதொன்றின் உறுப்பினர்களை ஏமாற்றக்கூடியதாக அல்லது தவறுதலுக்காளாக்கக்கூடியதாக அவ்விதம் நெருங்கி ஒத்திருந்தால், பதிவாளர் அவ் விண்ணப்பத்திற் சொல்லப்பட்ட அத்தொழிற் சங்கத்தின் பெயரை மாற்றும்படி, அப்பதிவு விண்ணப்பஞ் செய்பவர்களைத் தேவைப்படுத்துவதோடு அவ்வகையான மாற்றஞ்செய்யப்படும் வரைக்கும் அத்தொழிற் சங்கத்தைப் பதிவுசெய்ய மறுக்கவும் வேண்டும்.

பதிவுசெய்ய மறுத்தல்.

**14.** ஏதேனும் தொழிற் சங்கம் இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் எவற்றுக்கேனும் இணங்கியிருப்பதாகப் பதிவாளர் திருப்தியடையாவிட்டால், அல்லது அச்சங்கத்தின் குறிக்கோள்களில் அல்லது விதிகளில் ஏதாவதொன்று அல்லது அதன் அமைப்பு சட்டவிரோதமானதென அல்லது அவ் வேற்பாடேதாவதோடும் முரண்படுகிறதென அவர் எண்ணினால், அப்பதிவாளர் அத்தொழிற் சங்கத்தைப் பதிய மறுக்கலாம்.

பதிவைத் திருப்பிப் பெறுதல் அல்லது நீக்கஞ்செய்தல்.

**15.** (1) (அ) ஒரு தொழிற் சங்கம் குலைக்கப்படும்போது, அது பதிவாளரால் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தாக்கைய முறைப்படி ஆராயப்பட்டபின் அத்தொழிற சங்கத்தின் வேண்டுகோளின்பேரில்; அல்லது

(ஆ) (i) அப்பதிவுச் சான்றிதழ் மோசடியாக அல்லது தவறுதலாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றோ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) அத்தொழிற் சங்கத்தின் குறிக்கோள்களில் அல்லது விதிகளிலேதாவதொன்று சட்டவிரோதமானதென்றோ;

(iii) அத்தொழிற் சங்கத்தின் அல்லது அதன் நிறைவேற்று குழுவின் அமைப்பு சட்டவிரோதமானதென்றோ;

(iv) அத்தொழிற் சங்கம் வேண்டுமென்றும், பதிவாளரிடமிருந்து அறிவித்தல் இடைத்த பின்னரும் இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடெதனையும் மீறிவிட்டதென்றோ, அல்லது அவ்வேற்பாடெதனுடனும் இசைவற்றதாகவுள்ள ஏதாவது விதியை தொடர்ந்து வலுவிலிருந்து அனுமதித்ததென்ரு அல்லது 38ஆம் பிரிவின் மூலம் அதற்கு ஏற்பாடு தேவைப்படும் ஏதேனும் கருமத்துக்கு ஏற்பாடுசெய்யும் ஏதாவது விதியை நீக்கிவிட்டதென்றோ;

(v) அத்தொழிற் சங்கத்தின் நிதிகள் சட்டவிரோதமான முறையில் அல்லது ஒரு சட்டவிரோதமான குறிக்கோளுக்காக அல்லது அச்சங்கத்தின் விதிகளால் அதிகாரமளிக்கப்படாத ஒரு குறிக்கோளுக்காகச் செலவிடப்படுகின்றனவென்றோ;

(vi) அத்தொழிற் சங்கம் இல்லாதொழிந்து போனதென்றோ,

அவர் திருப்திப்பட்டால், அத்தொழிற் சங்கத்தின் பதிவுச்சான்றிதழ் பதிவாளரால் மீளப்பெறப்படலாம் அல்லது நீக்கஞ் செய்யப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஒன்று (அ) என்னும் உட்பிரிவினுள் அடங்கும் ஒரு சந்தர்ப்பத்திற்றவிர அப்பதிவுச் சான்றிதழ் மீளப்பெறப்படுமுன் அல்லது நீக்கஞ்செய்யப் படுமுன், என்ன காரணத்துக்காக அதன் பதிவுச் சான்றிதழ் மீளப்பெறப்பட அல்லது நீக்கஞ்செய்யப் பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்பதைக் குறித்து ரைத்து இரண்டு மாதத்திற்குக் குறையாத எழுத்து மூல முன்னறிவித்தல் அப்பதிவாளரால் அத் தொழிற் சங்கத்திற்குக் கொடுபடவேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஓர் அறிவித் தல் கொடுபட்ட ஒரு தொழிற் சங்கம், அவ்வறி வித்தல் கொடுபட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும் இரண்டு மாத காலப்பகுதியினுள் எந்த நேரத்தி லாவது, விடயத்துக்கேற்றுற் போல சான்றிதழை மீளப்பெறுவதற்கோ அல்லது நீக்கஞ்செய்வதற்கோ உள்ள உத்தேசத்திற்கு எதிராக எழுத்திலான காரணம் காட்டலாம்; அவ்வித காரணம் காட்டப் பட்டால், அச்சூழ்நிலைகளில் அவர் அவசியமென எண்ணக்கூடிய அவ்வித விசாரணையைப் பதிவாளர் நடத்தலாம்.

(4) மூன்றும் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்ட இரண்டு மாத காலப்பகுதி கழிந்தபின்னர், அதே உட்பிரிவின்கீழ் முறைப்படி காரணங் காட்டத் தவறிய அல்லது அங்ஙனம் காரணங் காட்டியும், விடயத்துக்கேற்றுற் போல அதன் பதிவுச் சான்றி தழை ஏன் மீளப்பெறுதலோ அல்லது நீக்கஞ் செய்தலோ ஆகாது என அவரைத் திருப்திப்படுத் தத் தவறிய ஏதாவதொரு தொழிற் சங்கத்தின் பதிவுச் சான்றிதழை பதிவாளர் மீளப்பெற்றுக் கொள்ளலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம்.

(5) ஏதேனும் தொழிற் சங்கத்தின் பதிவுச் சான்றிதழை மீளப் பெறும்படி அல்லது நீக்கஞ் செய்யும்படி இப்பிரிவின்கீழ்ப் பதிவாளரால் இடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஒரு கட்டளை, அது எத்தேதியிலிடப்பட்டதோ அத்தேதியாகவே தேதியிடப்படவேண்டும்; அத்துடன் அதனுற் பாதிக்கப்படும் அத்தொழிற் சங்கத்திற்கும் உடனடியாக அது கொடுபடலும் வேண்டும்.

மாவட்ட நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தல்.

**16. (1)** ஒரு தொழிற் சங்கத்தைப் பதிவுசெய்யப் பதிவாளர் மறுத்தால், அல்லது 15ஆம் பிரிவின் கீழ்ப் பதிவாளராலிடப்பட்ட கட்டளையினுல் இடருறும் ஆள் எவரும், அம்மறுப்பின் அல்லது கட்டளையின் தேதியிலிருந்து கணக்கிடப்படும் முப்பது நாட்கள் கொண்டதொரு காலத்தினுள் மாவட்ட நீதிமன்றத் துக்கு ஒரு மேன்முறையீட்டு மனுவைச் சமர்ப் பித்து அம்மறுப்பு அல்லது கட்டளைக்கெதிராக மேன் முறையீடு செய்யலாம்.

**(2)** ஒராம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் ஒவ் வொரு மேன்முறையீட்டு மனுவும் —

(அ) பதிவாளரை எதிர்வாதியாகக் காட்டு தல் வேண்டும்;

(ஆ) மேன்முறையீடு பண்ணுவதற்கான ஏதுக்களையும் எந்தக் கட்டளைக்கெதி ராக மேன்முறையீடு விரும்பப்படுகிற தோ அக்கட்டளையினது அல்லது அம் மறுப்பினது தேதியையும் கூறுதல் வேண்டும்;

(இ) மேன்முறையீட்டுக்காரரால் ஒப்பமிடப் படல் வேண்டும்;

(ஈ) ஒரு ரூபா பெறுமதியான ஒரு முத்தி ரையொட்டப்படுதல் வேண்டும்.

**(3)** ஒரு மேன்முறையீட்டில், —

(அ) அம்மேன்முறையீட்டுக்காரரை அல்லது அப்பதிவாளரை மேலதிக தகவலைக் கொடுத்துதவுமாறு பணிப்பதற்கு;

(ஆ) ஒரு விசாரணையை நடத்துவதற்கும், அது அவசியமெனக் கருதும் அத்த கைய சான்றை எடுத்துப் பதிவு செய் வதற்கும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அம்மேன்முறையீட்டை அனுமதிப்பதற்கும், அத்தொழிற் சங்கத்தைப் பதிவு செய்யும்படி கட்டளையிடுவதற்கு அல்லது **15**ஆம் பிரிவின்கீழ் அப்பதிவாளராற் செய்யப்பட்ட ஏதாவது கட்டளையை மாற்றுவதற்கும்;

(ஈ) அம்மேன்முறையீட்டைத் தள்ளிவிடுவதற்கு; அல்லது

(உ) அது நியாயமானதெனக் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கும் அம்மேன்முறையீட்டால் ஏற்பட்ட செலவுகள் பற்றியனவும் அம்மேன்முறையீடு விசாரிக்கப்படும்போது அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறை பற்றியனவுமான பணிப்புகள் உட்பட, அது அவசியமெனக் கருதக் கூடிய அத்தகைய பணிப்புகளைக் கொடுப்பதற்கும் மாவட்ட நீதிமன்றத்துக்குத் தத்துவமுண்டு.

(4) இப்பிரிவில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைவிட, ஒரு தொழிற் சங்கத்தைப் பதியப் பதிவாளரின் மறுப்புக்கு எதிராக அல்லது **15**ஆம் பிரிவின்கீழ்ப் பதிவாளராற் செய்யப்பட்ட கட்டளைக்கெதிராக, மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் ஒரு மேன்முறையீடானது, முத்திரைக் கட்டளைச்சட்டத்தினதும், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையினதும் நோக்கங்களுக்காக முந்நூறு ரூபா பெறுமதியுள்ள ஒரு குடியியல் வழக்காகக் கருதப்படும்.

(5) இந்தப் பிரிவிலே, ஒரு தொழிற் சங்கத்தைப் பதியப் பதிவாளர் மறுப்பதற்கெதிராக மேன்முறையீடு செய்யப்படும் விடயத்தில் "மாவட்ட நீதிமன்றம்" என்பது **9**ஆம் பிரிவின்கீழ்ச் செய்யப்படும் பதிவு விண்ணப்பத்திலே அத்தொழிற் சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் தானமெனப் பதியும்படி கோரப்படும் இடத்தின்மீது இடநியாயாதிக்கங் கொண்டு மாவட்ட நீதிமன்றம் என்ற பொருளாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் 15ஆம் பிரிவின்கீழ்ப் பதிவாளராற் செய்யப்படும் ஒரு கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படும் விடயத்தில், அக்கட்டளையாற் பாதிக்கப்படும் தொழிற் சங்கத்தின் பதியப்பட்ட அலுவலகம் இருக்குமிடத்தின்மீது இட நியாயாதிக்கங் கொண்டு மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாகும்.

உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல்.

**17.** பதினாறும் பிரிவின்கீழ் ஒரு மாவட்ட மன்றத்தால் இடப்பட்ட கட்டளைக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்ய இடமுண்டு அத்துடன் அத்தகைய மேன்முறையீடு தொடர்பிலான அல்லது அதோடு உறவுபட்ட எல்லாக் கருமங்களிலும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள், அதற்கிணங்க ஏற்புடையனவாகும்.

பதியத் தவறுதலினால் அல்லது பதிவு மீளப் பெறப்படுவதனால் அல்லது பதிவு நீக்கப் படுவதனால் உண்டாகும் விளைவுகள்.

**18.** ஏதேனும் தொழிற் சங்கம் உரிய காலத்தில் பதியப்படுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டால், அல்லது ஏதேனும் தொழிற் சங்கத்தின் பதிவு மறுக்கப்பட்டால், மீளப்பெறப்பட்டால் அல்லது நீக்கஞ் செய்யப்பட்டால், அப்போது —

(அ) அத்தொழிற் சங்கம் ஒருசட்டமுறையற்ற கழகமெனக் கருதப்படும்; அத்துடன் அச்சங்கத்திலும் அல்லது அதன் இருப்புகளிலும் அறவிடக்கூடியனவான அத்தொழிற் சங்கத்தால் உறப்பட்ட அல்லது உறப்படவேண்டிய எவையேனும் பொறுப்புகளுக்குப் பாதகமின்றி, ஒரு பதியப்பட்ட தொழிற் சங்கத்துக்குள்ள உரிமைகளும், பாதிப்பின்மைகளுள் அல்லது சிறப்புரிமைகளுள் எதனையும் அனுபவிக்காதொழியும்;

(ஆ) அத்தொழிற் சங்கமேனும், அச்சங்கத்தின் சார்பாக அதன் உத்தியோகத்தரில் அல்லது பிரதிநிதிகளில் எவரேனும் எதாவது தொழிற் பிணக்கிற் பங்குபற்றுதல், அல்லது எதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைநிறுத்தத்தை அல்லது கதவடைப்பை ஊக்குவித்தல், ஒழுங்கமைத்தல் அல்லது அதற்கு நிதியுதவி அளித்தல் அல்லது வேலைநிறுத்தத்தின்போது அல்லது கதவடைப்பின்போது அதன் உறுப்பினர்களுக்கு வேதனம் அல்லது வேறு நன்மைகள் கொடுத்துதவுதல் ஆகாது

(இ) அத்தொழிற் சங்கம் குலைக்கப்பட்டு, அதன் நிதிகள் அச்சங்கத்தின் விதிகளுக்கிணங்கக் கையாளப்படும்; அத்துடன்

(ஈ) அச்சங்கத்திற்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் எதிர்வாதியாக நின்று எதிர்க்கும் நோக்கத்துக்காகவும், விதிகளுக்கிணங்க அதன் நிதிகளைக் கையாளும் நோக்கத்துக்காகவும் தவிர, ஆள் எவரும் அதன் முகாமையில் அல்லது ஒழுங்கமைப்பில் பங்குபற்றவோ அல்லது அச்சங்கத்தின் சார்பாக அல்லது அச்சங்கத்தின் ஓர் உத்தியோகத்தராகச் செயலாற்றவோ அல்லது செயலாற்றுவதாகக் கொள்ளவோ கூடாது.

## பாகம் IV

(பி 2, 1948இன் 15.)

### பகிரங்க சேவையாளர்களின் தொழிற் சங்கங்களுக்கு ஏற்புடையனவான சிறப்பு ஏற்பாடுகள்.

இப்பாகத்தின் பொருள்கோடல். (பி 2, 1948இன் 15.)

**19.** இந்தப் பாகத்தில் —

(அ) "பகிரங்க சேவையாளர்" என்பது அவருடைய தொழிலின் நியதிகளேனும் அல்லது அவ்விதம் அவர் வேலைசெய்வதன் காலவெல்லையேனும் எவ்விதமிருப்பினும், இலங்கை அர

சாங்கத்தின் கீழே தொழிலுக்கமர்த் தப்பட்டிருக்கும் ஆள் எவரையும் உள்ளடக்கும்;

(ஆ) "இப்பாகம் ஏற்புடையதான தொழிற் சங்கம்" என்பது பகிரங்க சேவையாளர் அதன் உறுப்பினராக இருக்கின்ற அல்லது அதனது விதிகளின்படி பகிரங்க சேவையாளர் அதன் உறுப்பினர் களாய் இருக்க இடமளிக்கின்ற எந்தத் தொழிற் சங்கமும் என்று பொருளாகும்.

**20.** (1) இரண்டாம் பிரிவில் "தொழிற் சங்கம்" என்பதின் வரைவிலக்கணத்தில் குறித்துரைக்கப் பட்ட குறிக்கோள்களுள் ஒன்றையோ அதற்குக் கூடியவற்றையோ அதன் குறிக்கோளாக அல்லது குறிக்கோள்களுளொன்றாகவுடைய, பகிரங்க சேவை யாளர்களின் ஒவ்வொரு கழகமும் அல்லது கூட்ட மும், (2)ஆம் உட்பிரிவில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது தவிர, இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்கென ஒரு தொழிற் சங்கமாகுமென ஐயங்களைப் போக்குவதற்காக இதனால் வெளிப்படுத் தப்படுகிறது; அத்துடன் இக்கட்டளைச்சட்டத்தின் ஏற் பாடுகள் இதன் பின்னே வரும் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அப்படிப்பட்ட ஒவ்வொரு கழகத்திற்கும் அல்லது கூட்டத்திற்கும் அதற் கிணங்க ஏற்புடையதாகும்.

பகிரங்க சேவை யாளர்களின் கழகங்களுட் குறிக்கப்பட்ட சில "தொழிற் சங்கங் கள்" என வெளிப்படுத்தப்ப டுதல். (பி2, 1948இன் 15.

2. (அ) நீதித்துறை உத்தியோகத்தர்களை;
(ஆ) ஆயுதந்தாங்கிய படையினரின் உறுப்பினர்களை;
(இ) பொலிஸ் உத்தியோகத்தர்களை;
(ஈ) மறியற்சாலை உத்தியோகத்தர்களை அல்லது
(உ) சமத்தொழிற் சிறப்பணிக் கட்ட ளைச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப் படும் எதேனும் சிறப்பணியின் உறுப்பினர்களை கொண்டமையும் ஒரு

(பி 2, 1970இன் 2. )

கழகம் அல்லது கூட்டம் அதன் குறிக்கோள்களுள் எது எவ்விதமிருப்பினும், தொழிற் சங்கமொன்றெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு இக் கட்டளைச்சட்டத்திலுள்ள எதுவும் எதேனும் அத்தகைய கழகத்துக்கு அல்லது கூட்டத்துக்கு அல்லது அது தொடர்பில் ஏற்புடையதாகாது.

இவ்வுட்பிரிவில் —

(அ) "நீதித்துறை உத்தியோகத்தர்" என்பது 1946ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவை கட்டளையின் பொருளுக்குட்பட நீதித் துறைப் பதவியை வகிக்கின்ற ஆளொருவர் என்ற பொருளாகும்.

(ஆ) "ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது இலங்கைத் தரைப்படை, இலங்கை அரச கடற்படை, இலங்கை அரச வான் படை என்று பொருளாகும்;

(இ) "பொலிஸ் உத்தியோகத்தர்" என்பது பொலிஸ் கட்டளைச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட பொலிஸ் படையின் உறுப்பினர் ஒருவர் என்று பொருளாகும்; அத்துடன்

(ஈ) "மறியற்சாலை உத்தியோகத்தர்" என்பது மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளை உடையதாகும், ஆனால் எதேனும் மறியற்சாலையின் பணியாட்டொகுதியில் அப்போதைக்கு உறுப்பினராகவிருக்கும் எவரேனும் மருத்துவ உத்தியோகத்தரை அல்லது அப்போதிக்கரியை உள்ளடக்காது.

இப்பாகம் ஏற்புடையதாகவிருக்கும் சங்கங்களைப் பதிவுசெய்தல் பற்றிய மட்டுப்பாடு.
(பி 2, 1948இன் 15. )

**21.** (1) இந்தப் பாகம் ஏற்புடையதான எதேனும் தொழிற் சங்கத்தின் விதிகள் பின்வரும் ஏற்பாடுகளைக் கொண்டனவாயிருந்தாலன்றி, அத்தொழிற் சங்கத்தைப் பதிவாளர் பதிவுசெய்தலாகாது; அவையாவன :—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) அரசாங்கத்தின் ஏதாவதொரு குறித்துரைக்கப்பட்ட திணைக்களத்தில் அல்லது அரசாங்கத்தின் ஏதாவதொரு குறித்துரைக்கப்பட்ட சேவையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள, அல்லது வெவ்வேறு அரசாங்கத் திணைக்களங்களிற் றொழிலுக்கமர்த்தப்பட்டிருப்பினும் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் வேலையின் தன்மையைக் கவனிக்குமிடத்து ஏதாவதொரு குறிக்கப்பட்ட வகுப்பாக அல்லது வகுதியாகவிருக்கும், பகிரங்க சேவையாளர்களுக்கே தனியாக அச்சங்கத்தின் உறுப்பினராகவிருக்க அல்லது ஏதேனுஞ்சரி ஒரு பதவிவகிக்க (காப்பாளர் பதவியுட்பட, சம்பளங் கொடுபடுவதாயினும் சரி கௌரவமானதாயினுஞ்சரி) உள்ள தகைமையை மட்டுப்படுத்தும் ஓர் ஏற்பாடு:

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய ஏற்பாடானது உறுப்பினராகவிருப்பதற்கென அல்லது இருவருள் ஒருவர் அச்சங்கத்தின் தலைவராக அல்லது செயலாளராகப் பதவிவகிப்பதற்கும் மற்றவர் அச்சங்கத்தின் உறுப்பினராகவிருப்பதற்குமென அச்சங்கத்தினது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், விடயத்துக்கேற்றுற்போல அத்திணைக்களத்துக்கு அல்லது பகிரங்க சேவையாளர்களின் அவ்வகுப்புக்கு அல்லது வகுதிக்கு வெளியேயிருந்து, இருவர் தெரிவு செய்யப்பட அனுமதிக்கலாம்; (பி 3, 1970இன் 24. )

(ஆ) சமாதான உத்தியோகத்தர்களின் அல்லது அரசாங்க உயர்பதவி உத்தியோகத்தர்களின் சங்கமொன்றன் விடயத்தில், (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்பாட்டோடு கூட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) பகிரங்க சேவையாளர்களினதாக வுள்ளதாயினுஞ்சரி வேறு வகை யாகவுள்ளதாயினுஞ்சரி, வேறெத் தொழிற் சங்கத்துடனும் இத் தொழிற் சங்கங்கள் இணைக்கப் படுதலாகாது அல்லது சேர்க்கப் படுதலாகாது அல்லது கூட்டப் படுதலாகாது என வெளிப்படுத் தும் ஓர் ஏற்பாடு; அத்துடன்

(2) இக்கட்டளைச்சட்டத்தின் 47ஆம் பிரிவின் பொருளுக்குட்பட இச் சங்கம் அரசியற் குறிக்கோள்கள் எதனையும் அல்லது அரசியல் நிதி எதனையும் வைத்திருத்தலாகா தென வெளிப்படுத்தும் ஓர் ஏற்பாடு.

இவ்வுட்பிரிவிலும் 23ஆம் பிரிவிலும் —

(அ) "சமாதான உத்தியோகத்தர்" என்பது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையிலுள்ள அதே பொருளை உடையதாகும்; அத்துடன்

(ஆ) "அரசாங்க உயர்பதவி உத்தியோகத் தர்" என்பது அவரது பதவிக்குரிய தொடக்கச் சம்பளம் மாதமொன் றுக்கு ஐநூற்றறுபது ரூபாவுக்குக் குறையாத சம்பள அளவுத்திட்டத்தை யுடைய பதவியொன்றை வகிக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர் என்று பொருளாகும்.

(2) இந்தப் பாகம் ஏற்புடையதான ஏதேனும் தொழிற் சங்கத்தின் விதிகள், (1)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை அல்லது அவ்வேற் பாடுகளிலெதையாவது கொண்டிருக்கவில்லையென் னும் காரணத்துக்காக, அல்லது ஏதாவது விதியில் அடங்கியிருக்கும் ஏதாவது அப்படிப்பட்ட ஏற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சங்கத்தின் யாரேனும் உத்தியோகத்தரின் அறிவுடனும் அவருடைய சம்மதத்தோடும் அல்லது சூழ்ச்சியாலும் மீறப்படுகிறதென்னும் காரணத்துக்காக, அச்சங்கத்தைப் பதிய மறுக்கும் தத்துவத்தையும் 14ஆம் பிரிவின்கீழ் பதிவாளருக்குள்ள தத்துவங்கள் உள்ளடக்கும்; அத்துடன் இதற்கு முன்னே கூறப்பட்ட ஏதாவது காரணத்துக்காக, பதிவாளர் ஒரு தொழிற் சங்கத்தைப் பதிய மறுக்கும் எச்சந்தர்ப்பத்திலும் 16ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கு இடமுண்டு.

இப்பாகம் ஏற்புடையதாகவிருக்கும் சங்கத்தின் பதிவை நீக்கஞ்செய்தல். (பி 4, 1970இன் 24. )

**22.** (1) இருபத்தோராம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளுள் எதையாவது அப்போதைக்கு வலுவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தொழிற் சங்கத்தின் விதிகள் கொண்டிருக்கவில்லையென்றோ அல்லது அச்சங்கத்தின் ஏதாவது விதியிலிருக்கும் அவ்வித ஏற்பாடு அச்சங்கத்தின் உத்தியோகத்தர் எவரினதும் அறிவுடனும் அவருடைய சம்மதத்தோடும் அல்லது சூழ்ச்சியாலும் மீறப்பட்டிருக்கிறதென்றோ கொழும்பு மாவட்ட நீதிமன்றம் திருப்திப்பட்டால் அதற்கெனச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அந்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல், அந்நீதிமன்றம் இப்பாகம் ஏற்புடையதான அத்தொழிற் சங்கத்தின் பதிவுச் சான்றிதழை மீளப் பெறும்படி அல்லது நீக்கஞ் செய்யும்படி பதிவாளருக்குக் கட்டளையிடலாம்.

(2) எந்தத் தொழிற் சங்கம் சம்பந்தமாகவும் (1)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் —

(அ) அச்சங்கத்தை எதிர்வாதியாகக் காட்ட வேண்டும்;

(ஆ) அவ்விண்ணப்பம் செய்யப்படும் காரணங்களைக் காட்ட வேண்டும்; அத்துடன்

(இ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பாக மன்றாடியார் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்படவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் மாவட்ட நீதிமன்றத்துக்கு ஏதாவது விண்ணப்பம் செய்யப்பட்டதன் மேல், அந்நீதிமன்றம் ஒரு விசாரணை நடத்தி அது அவசியமெனக் கருதும் அத்தகைய சான்றுகளைத் திரட்டியும் பதிந்தும் கொள்ளவேண்டியதோடு, அவ்விசாரணையின் நோக்கங்களுக்காக ஒரு குடியியல் வழக்கிலே ஒரு மாவட்ட நீதிமன்றத்துக்கு உள்ள எல்லாத் தத்துவங்களையும் உடையதாகவுமிருந்து, அவைகளைப் பிரயோகிக்கலாம்.

(4) இப்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது மாவட்ட நீதிமன்றம் இடும் கட்டளை, 16ஆம் பிரிவின்கீழ் மாவட்ட நீதிமன்றத்தால் இடப்பட்ட ஒரு கட்டளையாகக் கருதப்பட வேண்டியதோடு 17ஆம் பிரிவின் ஏற்பாடுகளும் அதற்கிணங்க ஏற்புடையனவாகும்.

(5) எழுத்திலுள்ள வேறேதாவது சட்டத்தில் எது எவ்வாறுயிருப்பினும், இப்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதாவது விண்ணப்பத்திற்கோ, அல்லது அவ்வகையான விண்ணப்பத்தின்மீது எடுக்கப்படும் எவையேனும் நடவடிக்கைகளுக்கோ, அல்லது அந்த விண்ணப்பம் செய்யும்பொழுது அணைக்கப்படும் ஏதாவது ஆவணத்திற்கோ முத்திரைச் செலவு எதுவும் கொடுபட வேண்டியதில்லை.

(6) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படாத ஏதேனும் காரணத்திலாவது ஒரு தொழிற் சங்கத்தின் பதிவத்தாட்சிப் பத்திரத்தை மீளப்பெறவோ அல்லது நீக்கஞ் செய்யவோ பதிவாளருக்குள்ள ஏதாவது தத்துவத்தை இப்பிரிவின் ஏற்பாடுகள் பாதிப்பதாகக் கருதப்படவோ அல்லது பொருள்கொள்ளப்படவோ கூடாது.

இக்கட்டளைச்சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகளின் ஏற்புடைமை விலக்கப்பட்டுள்ளது. (பி 2, 1948இன் 15. )

23. பிரிவுகள் 32, 34, 37 ஆகியவற்றிலுள்ள எதுவும், இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள தொழிற் சங்கம் எதற்கும் ஏற்புடையனவாகா; அத்துடன் 35ஆம், 36ஆம் பிரிவுகளிலுள்ள எதுவும், அப்பிரிவுகள், பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கமொன்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் மாற்றம் தொடர்பில் அந்தளவுக்குத் தவிர, அத்தகைய ஏதேனும் விடயத்தில் ஏற்புடைய தாகாது.

இக்கட்டளைச்சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகள் குறித்தசில தொழிற் சங்கங்களுக்கு ஏற்புடையனவாகா. (பி 5, 1970இன் 24. )

(1) முப்பத்திரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள், இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள தொழிற் சங்கம் எதற்கும் ஏற்புடையனவாகா.

(2) முப்பத்தினாறு முதல் 47 வரையிலான ஏற்பாடுகள், சமாதான உத்தியோகத்தர்களின் அல்லது அரசாங்க உயர்பதவி உத்தியோகத்தர்களின் தொழிற் சங்கம் எதற்கும் ஏற்புடையனவாகா.

இக்கட்டளைச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளின் ஏற்புடைமையைப் பேணுதல். (பி 2, 1948இன் 15. )

**24.** வேறுவிதமாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டாலல்லாமல், இந்தப் பாகத்தின் ஏற்பாடு செய்யப்பட்டாலல்லாமல், இந்தப் பாகத்தின் ஏற்பாடுகள் இக்கட்டளைச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளோடு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டுமென்பதோடு அவைகளைப் பாதிக்காத வண்ணமிருத்தலும் வேண்டும்.

ஆயின், இந்தப் பாகத்தின் ஏதாவது ஏற்பாட்டுக்கும் இக்கட்டளைச்சட்டத்தின் வேறேதாவது ஏற்பாட்டுக்குமிடையில் ஏதாவது முரண் அல்லது ஓவ்வாமை ஏற்படுஞ் சந்தர்ப்பத்தில் முன்னே குறிக்கப்பட்ட ஏற்பாடே மேலோங்கி நிற்கும்.

## பாகம் — V

## தொழிற் சங்கங்களின் உரிமைகளும் பொறுப்புகளும்

பதியப்படாத சங்கங்களின் தகைமையீனங்கள்.

**25.** ஒரு தொழிற் சங்கம், அது பதியப்படும் வரையில், ஒரு பதிவுபெற்ற தொழிற் சங்கத்துக்கு இருக்கும் உரிமைகள், பாதிப்பின்மைகள் அல்லது சிறப்புரிமைகள் எவற்றையும் அனுபவிக்கலாகாது.

குறித்தசில விடயங்களில் குடியியல் வழக்கிலிருந்து பாதிப்பின்மை.

**26.** ஏதேனும் செயல் தொழில் ஒப்பந்தமொன்றை நிராகரிக்கும்படி இன்னொருவரைத் தூண்டுகிறது, அல்லது அது இன்னொருவருடைய தொழில், வியாபாரம் அல்லது சேவையுடன், அல்லது தான் நினைத்தபடி தன்னுடைய முதலை அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது முயற்சியைக் கையாள இன்னொருவருக்கிருக்கும் உரிமையுடன் தலையிடுவதாக இருக்கிறது என்னுங் காரணத்தால் மட்டும், ஏதேனும் தொழிற் சங்கத்தின் உறுப்பினரொருவர் ஒரு திறத்தவராக விருக்கும் ஒரு தொழிற் பிணக்கைக் கருதி அல்லது அதனை முன்னேற்றம் அளிப்பதற்காகச் செய்யப்பட்ட அச்செயல் தொடர்பாக, பதியப்பட்ட தொழிற் சங்கம் எதற்கும் எதிராக அல்லது அதன் உத்தியோகத்தர் அல்லது உறுப்பினரிலெவருக்குமெதிராக ஒரு குடியியல் நீதிமன்றத்திலே எவ்வகைப்பட்ட வழக்கு வைக்கவோ அல்லது வேறேதும் சட்ட நடவடிக்கையெடுக்கவோ கூடாது.

தீங்குதரும் செயல்களுக்கு தொழிற் சங்கம் பொறுப்புடையதாகாது.

27. ஒரு தொழிற் பிணக்கைக் கருதி அல்லது அதனை முன்னேற்றும் நோக்கத்தோடு, அத் தொழிற் சங்கத்தால் அல்லது அதன் சார்பாகச் செய்யப்பட்டிருப்பதாகக் காட்டப்படும் எதாவது தீங்குதரும் செயல் தொடர்பாக ஒரு தொழிற் சங்கத்திற்கெதிராகவோ அல்லது தங்கள் சார்பாகவும், அத்தொழிற் சங்கத்தின் ஏனைய எல்லா உறுப்பினர்கள் சார்பாகவும் உறுப்பினர்கள் அல்லது உத்தியோகத்தர்கள் எவர்க்கும் எதிராகவோ தொடரப்படும் எவ்வழக்கும் எந்த நீதிமன்றத்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தங்களில் உள்ள பொறுப்பு.

28. ஒவ்வொரு தொழிற் சங்கமும் அதனால் அல்லது அதன்சார்பாகச் செயலாற்றும் முகவர் ஒருவரால் செய்துகொள்ளப்பட்ட எந்த ஒப்பந்தத்தின் பேரிலும் பொறுப்புடையதாயிருத்தல் வேண்டும்:

ஆயின், சட்டபடி வறிதான அல்லது நடைமுறைக்குக் கொண்டு வரவியலாத எதாவதொரு ஒப்பந்தத்தின் பேரில் ஒரு தொழிற் சங்கம் அவ்விதம் பொறுப்புடையதாயிருக்கமாட்டாது.

தொழிலை மட்டுப்படுத்தும் குறிக்கோள்கள் பதியப்பட்ட தொழிற் சங்கங்களின் விடயத்தில் சட்டவிரோதமான வையாகாமை.

29. பதியப்பட்டதொரு தொழிற் சங்கத்தின் குறிக்கோள்கள் அவை ஒரு தொழிலை மட்டுப்படுத்துகின்றனவென்னுங் காரணத்தினால் மட்டும் அவ்வகையான சங்கத்தின் உறுப்பினரெவரையும் சதியாலோசனை செய்ததற்காகவேனும் அல்லது வேறுவிதமாகவேனும் குற்றவியல் வழக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரப்பட ஆளாக்கக்கூடியவண்ணம், அல்லது ஏதாவது உடன்படிக்கையை அல்லது நம்பிக்கைப் பொறுப்பைப் பயனற்றதாகக் அல்லது ஆக்கக் கூடியவண்ணம், சட்டவிரோதமானவையெனக் கருதப்படமாட்டா.

30. (1) ஒரு பதிவுப்பட்ட தொழிற் சங்கம் அதன் பதியப்பட்ட பெயர்கொண்டு வழக்குத் தொடரலாம். அதற்கெதிராகவும் வழக்குத் தொடரப்படலாம். அதோடு அப்பெயர்கொண்டு குற்றஞ்சாட்டவும் படலாம்.

தொழிற் சங்கங்களால் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் அவற்றிற்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளும்.

(2) பதியபடாததொரு தொழிற் சங்கம் எந்தப் பெயரிற் செயற்பட்டு வருகிறதோ அல்லது பொதுவாக எப்பெயரினுல் அழைக்கப்படுகிறதோ அந்தப் பெயரிலே அதற்கெதிராக வழக்குத் தொடரப்படலாம் அத்தோடு குற்றஞ்சாட்டவும்படலாம்.

(3) அதன் பதிவு நீக்கப்பட்ட அல்லது மீளப் பெறப்பட்ட ஒரு தொழிற் சங்கம், அது எப்பெயரிலே பதியப்பட்டதோ, அந்தப் பெயர் கொண்டு அதற் கெதிராக வழக்குத் தொடரப்படலாம் அத்தோடு குற்றஞ் சாட்டவும்படலாம்.

(4) ஒரு தொழிற் சங்கத்திலிருந்து குடியியல் நடவடிக்கைகளால் அறவிடப்பட்ட ஏதாவது பணத்துக்காகக, அதற்குச் சொந்தமான அல்லது அத்தொழிற் சங்கத்திற்காக நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படும் எந்த ஆதனத்திற்கும் எதிராக, ஆனல் ஒரு பதியப்பட்ட தொழிற் சங்கத்தின் சேம நல நிதியைத் தவிர, நிறைவேற்றல் வழங்கப் படலாம்.

(5) ஒரு தொழிற் சங்கத்தாற் கொடுபட வேண்டியதெனக் கட்டளையிடப்பட்ட ஏதாவது குற்றப் பணம், அத்தொழிற் சங்கத்துக்குரிய அல்லது அதற் காக நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படும் அசைவுள்ள ஏதாவது ஆதனத்தை, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடு களுக்கிணங்க நடுக்கட்டி விற்றலால், அறவிடப்பட லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) பதிவுப்பத்திரம் பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் இரு நம்பிக்கைப்பொறுப்பாளர்களாலாவது கையொப்பமிடப்பட்டிருந்தால், எந்த நீதிமன்றத்திலாவது அல்லது எந்தக் குடியியல் அல்லது நீதித்துறைசார் நடவடிக்கைகளிலாவது அப் பதிவுப்பத்திரத்தைக் கோப்பிடுதல் அத்தொழிற் சங்கத்துக்குத் தகுதிவாய்ந்ததாகும்.

## பாகம் VI

### அமைப்பு

பராயமற்றவர்களின் உறுப்பாண்மை.

31. இருபத்தைந்து வயதுக்குக் குறைந்த, ஆனால் பதினாறு வயதுக்கு மேற்பட்ட ஆள் ஒருவர் பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் விதிகளில் அதற்கு மாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினன்றி, அத்தொழிற் சங்கத்தின் உறுப்பினரொருவராக இருக்கலாம், அதோடு அத்தொழிற் சங்கத்தின் விதிகளுக்கமைவாக, இதனகத்தே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விதமாகத் தவிர, உறுப்பினர் ஒருவரின் சகல உரிமைகளையும் அனுபவித்து, அவ் விதிகளுக்கமைய நிறைவேற்றவேண்டிய அல்லது கொடுக்கவேண்டிய சகல சாதனங்களையும் முடித்துக்கொடுத்து அவசியமான சகல கடனழிப்புச் சீட்டுகளையும் கொடுக்கலாம்; ஆனால் அவர் பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் நிறைவேற்று குழுவின் உறுப்பினர் ஒருவராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளியான ஒருவராக இருக்கக் கூடாது.

தொழிற் சங்கத்தின் உத்தியோகத்தர்.

32. (1) பதியப்பட்ட ஒவ்வொரு தொழிற் சங்க உத்தியோகத்தரின் முழுத்தொகையின் அரைப் பங்குக்குக் குறையாதவர்கள், அத்தொழிற் சங்கம் உறவுபட்டுள்ள கைத்தொழிலில் அல்லது செய் தொழிலில் உண்மையாக ஈடுபட்டிருப்பவர்களாக அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கசெற்றில் வெளியிடப்படும் சிறப்பான அல்லது பொதுவான கட்டளைமூலம், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஏதாவதொரு பதிவு பெற்ற தொழிற் சங்கத்துக்கு அல்லது பதிவுபெற்ற தொழிற் சங்கங்களின் வகுப்புக்கு இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகமாட்டாதென அமைச்சர் வெளிப்படுத்தலாம்.

**33.** பதியப்பட்ட எந்தத் தொழிற் சங்கமும், அதன் உறுப்பினர்களின் முழுத்தொகையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்களின் சம்மதத்தோடும், **35**ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும் அதன் பெயரை மாற்றலாம். — பெயரை மாற்றுதல்.

**34.** பதியப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள், குலைக்கப்பட்டாவது குலைக்கப்படாமலாவது, அல்லது அத்தகைய தொழிற் சங்கங்களின் அல்லது அவற்றில் இரண்டிலொன்றன் அல்லது ஏதாவதொன்றின் நிதிகள் பிரிக்கப்பட்டாவது பிரிக்கப்படாமலாவது ஓரே தொழிற் சங்கமாக இணையலாம்: — இணைத்தல்.

ஆயின், அவ்விரு சங்கங்களிலொவ்வொன்றினதும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அச்சங்கங்களொவ்வொன்றினதும் வாக்களிக்க உரித்துள்ள உறுப்பினர்களில் அரைவாசிப் பேருடைய வாக்குகளாவது பதியப்பட்டு அவ்விதம் பதியப்பட்ட வாக்குகளில் நூற்றுக்கு அறுபது சதமானது, அவ்வுத்தேசத்துக்குச் சாதகமாக இருக்கவேண்டும்.

**35.** **(1)** பெயரை மாற்றுமிடத்து, தனது பெயரை மாற்றும் தொழிற் சங்கத்தின் செயலாளராலும் ஏழு உறுப்பினராலும், கையெழுத்திடப்பட்டதும், சங்கங்கள் இணைக்கப்படுமிடத்து, அவ்விதம் இணைக்கப்படும் ஒவ்வொரு தொழிற் சங்கத்தினது செயலாளராலும் ஏழு உறுப்பினராலும் கையெழுத்திடப்பட்டதுமான அறிவித்தல், ஒவ்வொரு பெயர் மாற்றத்தின்போதும், ஒவ்வொரு இணைத்தலின்போதும் பதிவாளருக்கு எழுத்துமூலம் கொடுபடவேண்டும். — பெயர்மாற்றத்தைப் பற்றிய அல்லது இணைத்தல் பற்றிய அறிவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) வைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் பெயர் என்ன பெயரிலே அப்பொழுது உள்ள வேறு ஒரு தொழிற் சங்கம் பதியப்பட்டிருக்கிறதோ அதுவேயாகுல், அல்லது அப்பதிவாளரின் அபிப்பிராயப்படி பொதுமக்களையோ அல்லது அவ்விரு தொழிற் சங்கங்களிலொன்றன் உறுப்பினர்களையோ ஏமாற்றக்கூடிய அவ்வளவுக்கு அப்பெயரை அவ்விதம் நெருங்கி ஒத்திருந்தால், அப்பதிவாளர் அப்பெயர் மாற்றத்தைப் பதிய மறுக்கவேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது தவிர பெயர்மாற்றம் தொடர்பிலான இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருக்கின்றனவென அவர் திருப்திப்பட்டால், பதிவாளர் அப்பெயர்மாற்றத்தை விதிக்கப்பட்ட முறையாகப் பதிதல் வேண்டும். அத்தோடு அப்பெயர் மாற்றமும் அவ்விதம் பதியப்பட்ட தேதியிலிருந்து பயனுடையதாகவரும்.

(4) சங்கங்கள் இணைக்கப்படுதல் தொடர்பிலான இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அவ்விதம் அமைக்கப்பட்ட தொழிற் சங்கம் 10ஆம் பிரிவின் கீழ் பதியப்பட உரித்துடையதென்றும், அப்பதிவாளர் திருப்திப்பட்டால், அவர் அவை இணைக்கப்படுதலை விதிக்கப்பட்ட முறையாகப் பதியவேண்டும். இணைக்கப்படுதலும் அவ்விதம் பதியப்பட்ட தேதியிலிருந்து பயனுடையதாகவரும்.

(5) அப்பதிவாளர் ஒரு பதியப்பட்ட தொழிற் சங்கத்தின் பெயர் மாற்றத்தைப் பதிய மறுத்தலாலேனும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பதியப்பட்ட தொழிற் சங்கங்கள் இணைவதால் ஏற்பட்ட அந்தத் தொழிற் சங்கத்தைப் பதிவதற்கு மறுத்தலாலேனும் இடருறும் ஆள் எவரும், அவ்வகையாக மறுக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும் முப்பது நாட்காலத்துக்குள் மாவட் நீதிமன்றத்துக்கு ஒரு மேன்முறையீட்டு மனு அணைத்து அவ்வகையான மறுத்தலுக்கு எதிராக மேன் முறையீடு செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழுள்ள ஒவ்வொரு மேன்முறையீட்டு மனுவும் —

(அ) பதிவாளரை எதிர்வாதியாக காட்ட வேண்டும்

(ஆ) மேன்முறையீடு செய்யப்படும் காரணங்களையும், எந்த மறுத்தலுக்கெதிராக அம்மேன்முறையீடு செய்யப்படுகிறதோ அதன் தேதியையும் கொண்டிருக்க வேண்டும்;

(இ) மேன்முறையீட்டாளரால் கையெழுத்திடப்பட வேண்டும்; அத்துடன்

(ஈ) ஒரு ரூபா முத்திரையொன்று ஒட்டப்பட்டுமிருக்க வே ண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவின்கீழான ஒரு மேன்முறையீடு செய்யப்படுமிடத்து —

(அ) அம்மேன் முறையீட்டாளரை அல்லது அப்பதிவாளரை மேலும் வேறுதகவல்களை அறிவிக்கும்படி கட்டளையிடுதல்;

(ஆ) ஒரு விசாரணை நடாத்தி, அது அவசியமெனக் கருதும் சான்றுகளைத் திரட்டுதலும் பதிதலும்;

(இ) அம்மேன்முறையீட்டை அனுமதித்து அப்பதிவாளரால் இடப்பட்ட கட்டளையை எதிர்மாற்றுதல்;

(ஈ) அம்மேன்முறையீட்டை நிராகரித்தல்; அல்லது

(உ) அது நியாயமானதெனவெண்ணும் கட்டளையயிட்டு அம்மேன்முறையீட்டை விசாரிக்கும்பொழுது கவனிக்க வேண்டிய முறையையும் பற்றிய பணிப்புகள் உட்பட அது அவசியமானவையெனக் கருதும் அத்தகைய பணிப்புகளை இடுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவட்ட நீதிமன்றத்துக்கு தகுதியானதாகும்

(8) ஆறும் உட்பிரிவில் வேறுவிதமாக விதிக்கப்பட்டவைதவிர (5) ஆம் உட்பிரிவின்கீழ் மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட ஒரு மேன்முறையீடு, முத்திரைக் கட்டளைச்சட்டத்தினதும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினதும் நோக்கங்களுக்காக முந்நூறு ரூபா பெறுமதியான ஒரு குடியியல் வழக்காகக் கருதப்படும்.

(9) இந்தப் பிரிவிலே "மாவட்ட நீதிமன்றம்" என்பது, ஒரு பதியப்பட்ட தொழிற் சங்கத்தின் பெயரில் ஒரு மாற்றத்தை அப்பதிவாளர் பதிய மறுப்பதற்கெதிராக ஒரு மேன்முறையீடு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அத்தொழிற் சங்கத்தின் பதியப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இடத்தின்மீது இட நியாயாதிக்கங் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாகும்; இரண்டு அல்லது அதற்குக் கூடிய பதியப்பட்ட தொழிற் சங்கங்கள் இணைக்கப்படுதலால் ஆக்கப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தை அப்பதிவாளர் பதிய மறுக்குமிடத்து "மாவட்ட நீதிமன்றம்" என்பது அவ்வண்ணம் இணைக்கப்படுதலின் பயனாக ஆக்கப்பட்ட அத் தொழிற் சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் இடமாகப் பதியப்படக் கோரப்பட்ட அந்த இடத்தின் மீது நியாயாதிக்கமுடைய மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாகும்.

(10) ஏழாம் உட்பிரிவின்கீழ் ஒரு மாவட்ட மன்றத்தால் இடப்படுங் கட்டளைக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்ய இடமுண்டு அந்த மேன்முறையீட்டுக்குரிய அல்லது அதோடு உறவுபட்ட எல்லாக் கருமங்களிலும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாகும்.

பெயர் மாற்றத்தின் அல்லது இணைக்கப் படுதலின் பயன்.

36. (1) ஒரு பதியப்பட்ட தொழிற் சங்கத்தின் பெயரில் ஏற்பட்ட மாற்றம், அத்தொழிற் சங்கத்தின் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் எவற்றையும் பாதிக்கவோ, அல்லது அத்தொழிற் சங்கத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதற்செதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளைதையும் குறைபாடுடையனவாக்கவோ மாட்டாது; அத்துடன் அதனுடைய முன்னைய பெயரில் அதனுல் அல்லது அதற்செதிராக தொடர்ந்து நடத்தப்பட்டிருக்கக்கூடிய அல்லது தொடக்கியிருக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகளைவற்றையும் அதன் புதிய பெயரிலே அதனுல் அல்லது அதற்செதிராக தொடர்ந்து நடத்தலாம் அல்லது தொடக்கலாம்.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பதியப்பட்ட தொழிற் சங்கங்கள் இணைக்கப்படுதல் அவ்வகையான தொழிற் சங்கங்களில் இரண்டிலேதாவதொன்றின், அல்லது அவற்றுள் எதாவதொன்றின் உரிமையெதற்கும் அல்லது அவற்றிலிரண்டிலேதாவதொன்றின் அல்லது அவற்றுள் எதாவதொன்றின் கடன்காரரொருவனின் உரிமையெதற்கும் பங்கம் விளைவிக்கமாட்டாது.

37. (1) பதியப்பட்ட ஒவ்வொரு தொழிற் சங்கமும், எல்லாக் கடிதப் போக்குவரத்துகளையும் அறிவித்தல்களையும் அவ்விடத்துக்கு அனுப்பக் கூடியதாக ஒரு பதியப்பட்ட அலுவலகத்தை வைத்திருத்தல் வேண்டும். பதியப்பட்ட அலுவலகம்.

(2) பதியப்பட்ட அவ்வித அலுவலகத்தின் இடவமைதியைப் பற்றியும் அதன்கண் ஏற்படும் மாற்றத்தைப் பற்றியும் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டு அவராற் பதியப்படவேண்டும்; அதோடு, அவ்வித அறிவித்தல் கொடுக்சப்படும் வரையில் அத்தொழிற் சங்கம் இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகியுள்ளதாகக் கருதப் படமாட்டாது

(3) (அ) பதியப்பட்ட ஓர் அலுவலகத்தை வைத்திராமலோ அல்லது இதனகத்தின்முன்னர் தேவைப்படுத்தப் பட்டவாறுக அதன் பதியப்பட்ட அலுவலகத்தின் இடவமைதியைப் பற்றியறிவித்தல் கொடுக்காமலோ செயற்படுகின்ற; அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அதன் இடவமைதியில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றிப் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்திராமல், அதன் பதியப்பட்ட அலுவலகம் மாற்றி வைக்கப்பட்டிருக்கும் ஏதாவதிடத்தில் செயற்படுகின்ற

ஒவ்வொரு தொழிற் சங்கமும் ஒரு நீதிவானால் நடாத்தப்படும் சுருக்க விசாரணையின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அது அவ்விதமாகச் செயற்படும் ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு ஆளாகும்; அவ்வித தொழிற் சங்கத்தின் உத்தியோகத்தர் ஒவ்வொருரும் அதே தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு அதே தொகையைக் குற்றப்பணமாகச்செலுத்தவும் கடப்பாடுடையவராவர்

விதிகள்.

38. (1) பதியப்பட்ட ஒவ்வொரு தொழிற் சங்கத்தினது விதிகள் முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டிருக்கும் எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

(2) தொழிற் சங்கம் ஏதாவதொன்றினது, அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளின் பிரதியொன்று, அதன் பதியப்பட்ட அலுவலகத்தில் எவரும் காணக்கூடியதாகப் பகிரங்கமாக வைக்கப்படவேண்டியதோடு ஐம்பது சதத்துக்கு மேற்படாத ஒரு தொகை கொடுத்துக் கேட்கும்போது ஆள் எவருக்கும் அத்தகைய தொழிற் சங்கத்தின் செயலாளரால் கொடுபடவும் வேண்டும்.

(3) பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் ஒவ்வொரு புதிய விதியினதும் அவ்விதிகளிற் செய்யப்படும் ஒவ்வொரு மாற்றத்தினதும் பிரதியொன்று அவ்விதி ஆக்கப்பட்ட அல்லது அத்திருத்தஞ் செய்யப்பட்ட ஏழு நாட்களுக்குள் பதிவாளருக்கு அனுப்பப்படவேண்டும்; அத்தோடு விதிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டதும் பதிவாளரால் அது பதியப்படவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) ஒரு தொழிற் சங்கத்தின் விதிகள் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் அல்லது தமிழில் ஆக்கப்படலாம்.

39. உத்தியோகத்தர்கள் பற்றிய எல்லா மாற்றங்களினதும் அல்லது உத்தியோகத்தர் எவரினதும் பதவி மாற்றத்தினதும் அறிவித்தல், பதியப்பட்ட ஒவ்வொரு தொழிற் சங்கத்தினது பதியப்பட்ட அலுவலகத்தில் எவரும் காணக்கூடியதாகப் பகிரங்கமாக வெளிக்காட்டி வைக்கப்படவேண்டும்; அத்துடன் அம்மாற்றத்தின் பின் எழு நாட்களுக்குள், விதிக்கப்பட்ட செலவோடு சேர்த்து அந்தத் தொழிற் சங்கத்தால் பதிவாளருக்கு அனுப்பப்படவேண்டும். அத்துடன் பதிவாளர் இடாப்பை அதற்கிணங்கத் திருத்தல் வேண்டும். உத்தியோகத்தர் முதலியோரின் மாற்றத்தைப் பற்றிய அறிவித்தல்.

40. பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கம் குலைக்கப்படுமிடத்து, அத்தொழிற் சங்கத்தின் எழு உறுப்பினர்களாலும் செயலாளராலும் கையெழுத்திடப்பட்ட குலைக்கப்படுதலைப் பற்றிய அறிவித்தல், அவ்வாறு குலைக்கப்பட்டதிலிருந்து பதினாலு நாட்களுக்குள் பதிவாளருக்கு அனுப்பப்பட்டு, அத்தொழிற் சங்கத்தின் விதிகளுக்கிணங்க அக்குலைத்தல் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அவர் திருப்திப்பட்டால் அது அவ்வாறு பதிவப்படல் வேண்டும்; அத்துடன் அவ்விதம் பதியப்பட்ட தேதியிலிருந்து அக்குலைவு பயனுடையதாக வரும். குலைத்தல் பற்றிய அறிவித்தல்.

41. (1) கூடியவரையில் எப்பொழுதும் நம்பிக்கைப்பொறுப்பாளர் எவரேனும் இருக்கக்கூடிய வகையாக, நம்பிக்கைப்பொறுப்பாளரை நியமித்தலுக்கும் அல்லது தெரிவதற்கும் நம்பிக்கைப் பொறுப்பாளருடைய பதவியில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், ஒரு தொழிற் சங்கத்தின் விதிகள் ஏற்பாடு செய்தல் வேண்டும். நம்பிக்கைப்பொறுப்பாளர்.

(2) பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் உத்தியோகத்தர் அல்லது உறுப்பினரெவரும் அதன் நம்பிக்கைப்பொறுப்பாளருளொருவராக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் VII

### ஆதனங்கள்

**எல்லா ஆதனங்களும் நம்பிக்கைப்பொறுப் பாளருக்குரித்தாக் கப்பட்டிருத்தல்**

**42.** பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா ஆதனமும் அந்தத் தொழிற் சங்கத்தினதும் அதன் உறுப்பினரதும் பயன்பாட்டுக்கும் நன்மைக்குமாக அதன் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு உரித்தாக்கப்பட்டு அந்த நம்பிக்கைப்பொறுப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவேண்டும்.

**ஆதனங்கள் வந்துறும் வகை.**

**43.** நம்பிக்கைப்பொறுப்பாளர் பதவியில் ஏதாவது மாற்றம் ஏற்படுமிடத்து பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் ஆதனம் அப்போதைக்கான அச்சங்கத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்களுக்கு, அந்த முன்னைய நம்பிக்கைப்பொறுப்பாளருக்கிருந்த அதே அக்கறையோடும் அவ்வளவிலும் அதே நம்பிக்கைப்பொறுப்புக்கமைவாகவும் உரித்துமாற்றம் அல்லது சாட்டுதல் எதுவுமில்லாமல் உரித்தாக வந்துறும்.

**காணியை அல்லது கட்டடங்களை கொள்வனை செய்தல் அல்லது குத்தகைக்குக் கொடுத்தல்.**

**44.** அதன் விதிகளிலுள்ள ஏதேனும் ஏற்பாட்டுக்கு அமைய, ஓர் ஏக்கருக்கு மேற்படாத ஏதாவது காணியை, அல்லது கட்டடங்களெவற்றையும் அச்சங்கதின் தேவைகளுக்காக அதன் நம்பிக்கைப் பெறுப்பாளர் பெயர்களில் கொள்வனை செய்யவோ அல்லது குத்தகையாக எடுக்கவோ, அத்துடன் ஏற்புடையதாகவிருக்கும் எழுத்துமூலமுள்ள அல்லது வேறுவிதமான சட்டமெதற்கும் அமைவாக, அவ்விதமாக கொள்வனை செய்யப்பட்ட அந்தக்காணி அல்லது கட்டடமெதையும் விற்கவோ, மாற்றிக் கொள்ளவோ, ஈடுவைக்கவோ அல்லது குத்தகைக்குக் கொடுக்கவோ டதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்துக்குச் சட்டமுறையானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் VIII

## நிதிகளும் கணக்குகளும்

நிதிகளைப் பிரயோகித்தல்.

**45.** பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் நிதிகள் அதன் விதிகளுக்கும் இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமமைவாக, எக் குறிக்கோளுக்காக அத்தொழிற் சங்கம் தாபிக்கப்பட்டதோ அந்தச் சட்டமுறையான குறிக்கோளுக்கெனப் பிரயோகிக்கப் படலாம்.

ஒரு சங்கத்தின் நிதிகள் பிரயோகிக்கப்படக் கூடாத நோக்கங்கள்

**46.** பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் நிதிகள், ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளையால் யாராவதொருவர்மீது விதிக்கப்பட்ட ஏதாவது குற்றப்பணத்தை அல்லது குற்றப்பணத்தின் ஒரு பாகத்தை அல்லது முழுவதையும் செலுத்துவதற்காக நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாகவேனும் பிரயோகிக்கப்படலாகாது.

அரசியற் குறிக்கோள்களும் அரசியல் நிதியும்.

**47.** (1) அரசியல் நிதிக்கெனப் பிரத்தியேகமாகச் சேர்க்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட தொகைகளிலிருந்து, இக்கட்டளைச்சட்டத்திலே இதன்பின்னர் "அரசியல் நிதி" எனக் கூறப்படும் வேருனதொரு நிதியை பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கம் ஏற்படுத்தலாம்; அதன்பின்னர் இக்கட்டளைச்சட்டத்திலே "அரசியல் குறிக்கோள்" என (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டிருக்கும் குறிக்கோள்களெல்லாவற்றையும் முன்னேற்றும் நோக்கத்தோடு அதன் உறுப்பினர்களின் குடியியல், அரசியல் நன்மைகளை ஓங்கச் செய்யும்பொருட்டு அதிலிருந்து பணத்தொகைகள் கொடுபடலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசியல் நோக்கங்களாவன —

(அ) மூதவையுறுப்பினரொருவராக அல்லது பாராளுமன்ற உறுப்பினராக அல்லது ஏதாவதொரு பகிரங்கவுத்தியோகத்துக்கு வேட்பாளரால் அல்லது இருப்பவரால் வேட்பாளராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க உத்தேசிப்பவரால், அவருடைய தேர்தல் அல்லது வேட்பு தொடர்பாக, அத்தேர்தலுக்கு முன்னோ, அல்லது அத்தேர்தல் நடக்கும்போது அல்லது அத்தேர்தலுக்குப் பின்னரோ, வெளிப் படையாகவேனும் மறைமுகமாக வேனும் பட்ட கடன்களெவற்றை யாவது கொடுத்தல்; அல்லது

(ஆ) அவ்வகையான வேட்பாளர் அல்லது வேட்பாளராக நிற்க உத்தேசிப்பவர் சார்பாக கூட்டமெதாவதையும் நடத்துதல், அல்லது பிரசுரங்கள் அல்லது ஆவணங்களை விநியோகித்தல்; அல்லது

(இ) மூதவையுறுப்பினரொருவராக அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது பகிரங்க உத்தியோகத்தராக இருக்கும் ஒருவரைத் தாபரித்தல்; அல்லது

(ஈ) வாக்காளர் இடாப்பு எதனையும் தயாரித்தல் அல்லது திருத்துதல், வாக்காளரைப் பதிதல், அல்லது மூதவைக்கு அல்லது பாராளுமன்றத்துக்கு உறுப்பினராக வேனும் அல்லது ஒரு பகிரங்க உத்தியோகத்துக்கேனும் தேர்தலுக்கு நிற்றற்கு ஒரு வேட்பாளரைத் தெரிந்தெடுத்தல்; அல்லது

(உ) எவ்வகைப்பட்ட அரசியற் கூட்டங்களையேனும் நடாத்துதல், அல்லது அரசியல் சம்பந்தமான எவ்வகைப் பிரசுரங்களையேனும் அல்லது ஆவணங்களையேனும் விநியோகித்தல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உட்பிரிவிலே "பகிரங்கப் பதவி" என்பது மாநகரசபையின், நகரசபையின், பட்டினசபையின், கிராமச்சபையின் அல்லது எழுத்திலுள்ள ஏதாவது சட்டத்தால் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்டதும் ஏதாவது வரியை, வீதவரியை அல்லது கட்டணத்தை விதித்தல் மூலம் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பணம் சேகரிக்கத் தத்துவமுள்ளதும் அல்லது தத்துவமுள்ளதாகவிருக்கக் கூடியதுமான வேறேதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரெவரினதும் பதவியென்று பொருளாகும்.

(3) அந்நோக்கத்துக்காகச் சிறப்பாகக் கூட்டப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்தில் சமுகமாகவிருந்து வாக்களிக்கும் அச்சங்கத்தின் உறுப்பினர்களிற் பெரும்பான்மையினரால் ஓர் அரசியல் நிதியை ஆக்குவதற்குச் சாதகமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலன்றி, பதியப்பட்ட எந்தத் தொழிற் சங்கத்தாலும் அரசியல் நிதி எதுவும் உருவாக்கப் படலாகாது.

(4) அரசியல் குறிக்கோளெதையும் முன்னேற்றுவதற்காக எச்செலவும் பதியப்பட்ட தொழிற் சங்கமெதனாலும் அதன் அரசியல் நிதியிலிருந்தன்றிக் கொடுபடுதலாகாது.

(5) அந்த நிதிக்குக் கொடுத்துதவ அவர் சம்மதிப்பதாக, பொருளளவில் இரண்டாம் அட்டவணையிலுள்ள (1)ஆம் படிவத்திலுள்ளதான ஓர் அறிவித்தலை அதன் பதியப்பட்ட அலுவலகத்திற் கையெழுத்திட்டு ஒப்படைத்திருப்பினன்றி, அத்துடன் பொருளளவில் அதேயட்டவணையிலுள்ள (11)ஆம் படிவத்திலுள்ள ஓர் அறிவித்தலை அச்சங்கத்தின் பதியப்பட்ட அலுவலகத்திற் கையெழுத்திட்டுக் கொடுத்தல் மூலம் அவ்வகையான முன்னைய அறிவித்தலை மீளப் பெற்றுக்கொள்ளா விட்டாலன்றி, இச்சங்கத்தின் அரசியல் நிதிக்குக் கொடுத்துதவ எப்பதியப்பட்ட தொழிற் சங்கத்தின் உறுப்பினர் எவரும் பொறுப்புடையவராகமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழான ஓர் அறிவித்தல், அதைக் கொடுப்பவரால் நேரடியாக அல்லது முகவர்மூலம் அல்லது சேவையாளர்மூலம் கொடுபடலாம்; அதோடு அப்பதியப்பட்ட தொழிற் சங்கத்தின் செயலாளருக்கு அதன் பதியப்பட்ட அலுவலகத்தின் விலாசமிட்டு பதிவஞ்சல்மூலம் அது அனுப்பப்பட்டிருந்தால், அவ்வறிவித்தல் முறையாக ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(7) அவ்விதம் கொடுத்துதவ அவர் பொறுப்புடையவராயிருந்தாலன்றி, அவ்வரசியல் நிதிக்குப் பணங் கொடுத்துதவ, உறுப்பினர் எவரும் கட்டாயப் படுத்தப்படவோ அல்லது தேவைப்படுத்தப்படவோ கூடாது.

(8) பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் உறுப்பினரொருவர் அச்சங்கத்தின் அரசியல் நிதிக்குக் கொடுத்துதவப் பொறுப்புடையவராகுமிடத்து, அச்சங்கத்தின் நிதிக்குக் கொடுத்துதவும்படி அவ்வுறுப்பினரைக் கேட்கும் ஒவ்வொரு முறையும், அந்த அரசியல் நிதிக்குக் கொடுக்கும் கொடையாக அவரிடம் கேட்கப்படும் ஏதாவது தொகையிருந்தால் அத்தொகையை வெவ்வேறாகக் குறித்துரைத்தல் வேண்டும்; அச்சங்கத்தின் நிதிக்கு அந்த உறுப்பினராற் கொடுபட்ட தொகையின் பேரால் பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் உறுப்பினரொருவருக்குக் கொடுபடும் ஒவ்வொரு பற்றுச்சீட்டும் கொடுத்துதவிய முழுத்தொகையில் அந்த அரசியல் நிதியின் கணக்குக்கு வகையால் தொகை ஏதாவது கொடுபட்டிருந்தால் அந்த உறுப்பினரிடமிருந்து பெறப்பட்ட தொகை எவ்வளவு என்பதை வேறாகக் குறித்தல் வேண்டும்.

(9) அவ்வரசியல் நிதிக்குக் கொடுத்துதவப் பொறுப்புடைய உறுப்பினர்களின் உதவுதொகைகளையும் உறுப்பினர் அல்லாதவர்கள் அவ்வரசியல் நிதிக்குத் தாமாகவே கொடுத்துதவிய தொகைகளையுந் தவிர்ந்த, ஒரு தொழிற் சங்கத்தின் வேறெந்த கையிருப்புத் தொகையும் அவ்வரசியல் நிதிக்கு வரவு வைக்கப்படலாகாது; அத்துடன் அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரசியல் நிதியின் ஒரு பாகமாகவிராத அத்தொழிற் சங்கத்துக்குரிய எந்தக் கையிருப்புத் தொகையும் ஏதாவது அரசியற் குறிக்கோளை முன்னேற்றுவதற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரயோகிக்கப்படலாகாது.

(10) பதிவுப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் உறுப்பினர் அதன் அரசியல் நிதிக்குப் பணங் கொடுத்துதவாதவராயின் அவர் அந்த நிதிக்குப் பணங் கொடுத்துதவாத காரணத்தினால் அதிலிருந்து வெளியேற்றப்படவோ அல்லது அந்தத் தொழிற் சங்கத்துக்குரிய சலுகைகளை அநுபவிப்பதிலிருந்து விலக்கப்படவோ அல்லது அத்தொழிற் சங்கத்தின் ஏனைய உறுப்பினருடன் ஒத்துப்பார்க்கும் போது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ (அந்த அரசியல் நிதியைக் கட்டுப்படுத்திப் பரிபாலித்தலை ஒழிந்த) வேறெந்த வகையிலாவது வாய்ப்புக் குறைவான அல்லது அநுகூலமற்ற நிலையில் வைக்கப்படவோ கூடாது; அத்துடன் அத்தொழிற் சங்கத்திற் சேருவதற்கு, அந்த அரசியல் நிதிக்கு கொடுத்துதவுதல் ஒரு நிபந்தனையாக ஆக்கப்படல் கூடாது.

48. பதிவுப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் நிதிகள் அதிகாரமளிக்கப்படாத முறையில் அல்லது சட்டவிரோதமாகச் செலவு செய்யப்படுவதைத் தடை செய்வதற்கானவொரு தடைக்கட்டளை அங்ஙனம் வேண்டுகோள் செய்தற்குப் போதிய அக்கறையுள்ள எவரேனும் ஆள் அல்லது சட்டதுறைத் தலைமையதிபதி செய்யும் விண்ணப்பத்தின்மீது கொடுபடலாம். **நிதிகளை அதிகாரமளிக்கப்படாத முறையிலும் அல்லது சட்டவிரோதமாகவும் செலவுசெய்தலைத் தடைசெய்யும் தடைகட்டளை.**

49. (1) பதிவுப்பட்ட ஒரு தொழிற்சங்கத்தின் ஒவ்வொரு பொருளாளரும், அச்சங்கத்தின் கணக்குகளுக்கு அல்லது அதன் நிதிகளை அல்லது பணங்களைச் சேர்ப்பதற்கு அல்லது செலவிடுவதற்கு அல்லது பாதுகாப்பதற்கு அல்லது கட்டுப்படுத்திக் கருமங்களை நடாத்துவதற்குப் பொறுப்பாளியாகவுள்ள அதன் ஏனைய உத்தியோகத்தர் ஒவ்வொருவரும், தம்முடைய பதவியிலிருந்து விலகும்போது அல்லது அதனை வறிதாக்கும்போதும், ஒவ்வோராண்டும் ஒரு **பொருளாளர் கணக்குகளைச் சமர்ப்பித்தல்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாவதும் அச்சங்கத்தின் விதிகளால் குறித்துரைக்கப்படக்கூடிய அந்தச் சமயத்திலும் அச்சங்கத்தின் விதிகளால் அல்லது அதன் உறுப்பினர்களின் தீர்மானமொன்றினால் அவர் அவ்விதம் செய்யும்படி வேண்டப்படக்கூடிய வேறெந்தக் காலங்களிலும், அவர் பதவி ஏற்ற தேதியிலிருந்து கழிந்த கணக்கை ஒப்புவித்திருந்தால் அவ்விதமான கணக்கை அவர் ஒப்புவித்த அக்கடைசித் தேதியிலிருந்து அவர் பெற்றுக்கொண்டனவும் கொடுத்தனவுமான எல்லாப் பணங்களினதும், அவ்விதமான கணக்கை அவர் ஒப்புவிக்கும் நேரத்தில் தமது கையிலிருக்கும் மீதிப் பணத்தினதும், அவர்வசமுள்ள அல்லது அவருடைய பாதுகாப்பில் ஒப்புவிக்கப்பட்டனவும் அத்தொழிற் சங்கத்துக்குரியனவுமான கடன் முறிகளினதும் பிணைச் சாதனங்களினதும் அல்லது ஏனைய ஆதனங்களினதும் நியாயமானதும் உண்மையானதுமான ஒரு கணக்கை அச்சங்கத்துக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் சமர்ப்பிக்கவேண்டும்.

(2) கணக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய படிவம் ஒழுங்குவிதிமூலம் விதிக்கப்படலாம்.

(3) அந்தக் கணக்கு ஓர் அத்தாட்சிப்பத்திரத்தால் உண்மைப்படுத்தப்படல் வேண்டும். அதோடு பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியும் பொருத்தமுடையவரொருவரால் அக்கணக்குப் பரிசோதிக்கப்படும்படி அச்சங்கம் செய்தல் வேண்டும்.

(4) அக்கணக்குப் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர், பொருளாளர் அல்லது (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட வேறெவரேனும் உத்தியோகத்தர், அவ்விதஞ் செய்யும்படி வேண்டப்பட்டால், அவரிடமிருந்து போதுமதியெனத் தோன்றும் மீதிப் பணத்தையும் மேலும் அவ்வாறும் தேவைப்படுத்தப்பட்டால் அவர் வசம் அல்லது அன்று கட்டுக்காப்பில் அல்லது வேறேதும் விதமாக அவரது கட்டுப்பாட்டிலிருக்கும் எல்லாக் கடன் முறிகளையும், பிணைச் சாதனங்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் புத்தகங்களையும், பத்திரங்களையும் அச்சங்கத்துக்குரிய ஆதனங்களையும் அச்சங்கத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளரிடம் உடனேயே கொடுத்துவிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு விவரக் கூற்றுகள்.

50. (1) விதிக்கப்படும் தேதியை அடுத்து முந்திய மார்ச் மாதம் 31ஆந் நாளன்று முடிவடையும் பன்னிரண்டு மாத காலத்தில் ஏற்பட்ட எல்லா வரவு செலவுகளைப் பற்றியும் அதே மாதம் 31ஆம் நாளன்று அத்தொழிற் சங்கத்திற்கிருந்த சொத்துக் களையும் கடன்களையும் பற்றியும் பொதுக் கூற்றொன்றை, விதிக்கப்பட்ட முறையாகக் கணக்காய்வுசெய்யப் பட்டபின் ஒவ்வோராண்டும் விதிக்கப்பட்ட தேதியிலோ அதற்கு முன்னரோ பதியப்பட்ட ஒவ்வொரு தொழிற் சங்கத்தினது செயலாளரும் அப்பதிவாளருக்கு ஆண்டுதோறும் சமர்ப்பிக்கவேண்டும். அவ்விபரத்தோடு கூட அந்தக் கணக்காய்வாளரது அறிக்கையின் பிரதியொன்று அனுப்பப்பட வேண்டியதோடு, விதிக்கப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்பட்டு விதிக்கப்படக்கூடிய விபரங்களையும் அடங்கியதாக விருக்க வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவிலே குறிப்பீடுசெய்யப் பட்ட பொதுக் கூற்றோடு சேர்த்து, விதிகளினது மாற்றங்களின் அல்லது திருத்தங்களின் பிரதியொன்றையும், எல்லாப் பதிய விதிகளின் பிரதியொன்றையும் மேற்குறித்த மார்ச் மாதம் 31ஆந் நாளுக்கு முந்திய பன்னிரண்டு மாத காலத்திலும் அச்சங்க உத்தியோகத்தரின் மாற்றங்களின் நிரலொன்றையும் அந்நாளில் வலுவிலிருக்கும் அத்தொழிற் சங்க விதிகளின் பிரதியொன்றையும் பதியப்பட்ட ஒவ்வொரு தொழிற் சங்கத்தினது செயாலளரும் அப்பதிவாளருக்குக் கொடுத்துதவ வேண்டும்.

(3) இக்கட்டளைச்சட்டம் தொடங்குவதற்கு முன் தாபிக்கப்பட்ட பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் விடயத்தில், அந்தத் தொழிற் சங்கத்தின் நிதியாண்டு முடியும் நாளை, (1)ஆம், (2)ஆம் உட்பிரிவுகளில் கூறப்பட்ட மார்ச் மாதம் 31ஆந் நாளுக்குப் பதிலாக இடுதலும், அங்ஙனம்அவசியமானல் வேறொரு தேதியை (1)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகக் குறிப்பிடப்பட்ட அந்தத் தேதிக்குப் பதிலாக இடுதலும் அதற்கென அவருக்கு விண்ணப்பஞ் செய்யப்படின், தமது கைப்பட்ட எழுத்துமூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைத்தல் பதிவாளருக்குச் சட்டமுறையான தாகும்; அத்துடன் பதிவுசெய்யப்பட்ட அந்தத் தொழிற் சங்கத்தின் விடயத்தில், அத்தேதியும் அவ்வண்ணம் மாற்றியமைக்கப்பட்ட நாளும் முறையே (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத் தேதியாயிருந் தாற்போலவும்(1)ஆம் 2ஆம் உட்பிரிவுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட அந்த நாளாயிருந்தாற்போலவும் இப் பிரிவின் ஏற்பாடுகளெல்லாம் அதன்பின்னர் அதற் கிணங்க ஏற்புடையனவாகும்.

(4) பதிவுப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பொதுக் கூற்றின் பிரதியொன் றை செலவேதுமில்லாமற் பெற உரித்துடையவராவர் அதோடு பதிவுபெற்ற ஒவ்வொரு தொழிற் சங்கத் தின் செயலாளரும் அதற்கென அவருக்கு விண்ணப் பஞ் செய்யப்படுமிடத்து அவருடைய சங்க உறுப் பினர் ஒவ்வொருவருக்கும் அவ்விதமான கூற்றின் பிரதியொன்றைக் கொடுக்கவேண்டும்.

(5) இப்பிரிவின் தேவைப்பாடுகளிலெதற்கு மிணங்கியொழுகத் தவறும் பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் செயலாளர் எவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாகி ஒரு நீதிவானால் சுருக்கமுறையாக விசாரிக்கப்பட்டபின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன் மேல், நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப் பணத்துக்கு ஆளாவார்.

(6) ஓராம், (2)ஆம் உட்பிரிவுகட்கமையப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படும் ஏதாவது பொதுக் கூற்றில், பிரதியில் அல்லது நிரலில் ஏதாவது பொய்யானதை எழுத அல்லது உள்ளதை எழுதாமல்விட வேண்டுமென்றே செய்யும் அல்லது எஃம் அல்லது எழுதுவிக்கும் அல்லது செய்விக்கும் ஆள் ஒவ்வொருவரும் தவறென்றுக்குக் குற்ற வாளியாகி நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப் பணத்துக்கு, அல்லது மூன்று மாதத்துக்கு மேற் படாத ஒரு காலத்துக்கான இருவகை மறியலில் ஒரு வகையான மறியலுக்கு அல்லது அவ்வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான குற்றப்பணம், மறியல் ஆகிய இரண்டிற்கும் ஆளாவார்.

51. பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் கணக்குப் புத்தகங்களும் அதன் உறுப்பினர்களின் நிரலொன்றும் அத்தொழிற் சங்க விதிகளிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நேரங்களில் அத்தொழிற் சங்கத்தின் உத்தியோகத்தர் அல்லது உறுப்பினர் எவரும் பரிசோதிக்கக்கூடியதாக வைக்கப்படல் வேண்டும். கணக்குகளையும் ஆவணங்களையும் பரிசோதித்தல்.

பாகம் IX

## ஒழுங்கு விதிகள்

52. (1) இக்சட்டவாச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் கொண்டுநடாத்துவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக அமைச்சர்கள் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும் (1)ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பாதகமின்றியும் பின்வருவனவையெல்லாவற்றிற்குமாக அல்லது அவைகளிலேதாவதொன்றிற்காக அல்லது அவையெல்லாவற்றின் அல்லது அவைகளிலேதாவதொன்றின் தொடர்பாக, அமைசசர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(அ) இக்சட்டவாச்சட்டத்திலே விதிக்கப்படவேண்டியனவெனக் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட சகல கருமங்களும்;

(ஆ) இக்சட்டவாச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படவேண்டிய புத்தகங்களும், பதிவு இடாப்புகளும், அவற்றிற்கான படிவங்களும்;

(இ) தொழிற் சங்கங்களும் அத்தொழிற் சங்கங்களின் விதிகளும் பதியப்படவேண்டிய முறையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியப்படும்போது கொடுபடவேண்டிய கட்டணங்களும்;

(ஈ) பதியப்பட்ட தொழிற் சங்கங்களின் அல்லது அவ்வகைப்பட்ட சங்கங்களின் ஏதாவதொரு வகுப்பின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படவேண்டிய முறையும், அவை எவர்களாற் கணக்காய்வு செய்யப்படவேண்டுமோ, அவர்களின் தகைமைகளும்;

(உ) எந்த நிபந்தனைகளுக்கமையப் பதிவாளரால் வைத்திருக்கப்படும் ஆவணங்கள் பார்வையிட அனுமதிக்கப்படலாமோ, அவையும், அவ்விதம் பார்வையிடுதல் தொடர்பாக அறவிடப்படவேண்டிய கட்டணங்களும்;

(ஊ) ஒரு தொழிற் சங்கத்தின் நிதிகளையும் பணங்களையும் முறையாக கையாளுதலும் பத்திரமாகப் பாதுகாத்தலும்;

(எ) பதியப்பட்ட தொழிற் சங்கங்களின் சகாய நிதிகளை உருவாக்கலும், நிருவகித்தலும், பாதுகாத்தலும், கட்டுப்படுத்தலும், கையாளலும், அதோடு தொடர்புள்ள அல்லது அதன் இடைநேர்விளைவான சகல கருமங்களும்; அத்துடன்

(ஏ) பொதுவாக, இந்த உட்பிரிவிலே குறிப்பாகக் கூறப்பட்ட சகல கருமங்களுடனும் அல்லது விடயங்களுடனும் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான சகல கருமங்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இரண்டாம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியெதாவது குறித்துரைக்கப்பட்ட ஒரு தொழிற் சங்கத்துக்கே ஏற்புடையதாகவிருக்குமென, அல்லது குறித்துரைக்கப்பட்ட தொழிற் சங்கமெதாவது அல்லது தொழிற் சங்கத்தின் வகுப்பெதாவது அதேயுட்பிரிவின் அதே பந்தியின்கீழ் உருவாக்கப்பட்ட எதாவது ஒழுங்கு விதியின் செயற்பாட்டிலிருந்து விலக்கப்பட்டிருக்க வேண்டுமென அமைச்சர் ஒழுங்குவிதி மூலம் வெளிப்படுத்தலாம்.

53. (1) ஐம்பத்திரண்டாம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் எந்த ஒழுங்குவிதியும், மூதவையாலும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்டாலன்றி பயனுடையதாகவரமாட்டாது. அவ்விதமான அங்கீகாரத்தைப் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும். ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுதல்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், (1)ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, அந்த ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்பட்டமை பற்றிய ஓர் அறிவித்தல் வெளியிடப்பட்டதும் இதன்கண் சட்டமாக்கப்பட்டாற்போல அதே செல்லுபடியும் பயனுமுடையதாயிருக்கும்.

## பாகம் X

## தவறுகளும் தண்டங்களும்

54. (1) பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் உறுப்பினராற் செய்யப்படும் முறைபாட்டின்பேரில், அச்சங்கத்தின் எவரேனும் உத்தியோகத்தர் அல்லது எவரேனும் உறுப்பினர் அச்சங்கத்தின் விதிகளுக்குடன்பாடில்லாத வகையில் தனது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் அச்சங்கத்தின் ஆதனமெதாவதையும் வைத்திருக்கிறாரென அல்லது அச்சங்கத்தின் பணமெதனையும் சட்டத்துக்கு விரோதமாகச் செலவு செய்துவிட்டார் அல்லது கொடாது வைத்திருந்துவிட்டாரென ஒரு நீதிவான் திருப்தியடையும் வகையிற் காட்டப்படுமிடத்து, அவ்விடயத்தில் நீதி செலுத்துவதற்காக அவ்விதஞ் செய்ய பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் பணங்களை அல்லது ஆதனங்களைத் துர்ப்பிரயோகம் செய்வதற்கான தண்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென ஒரு நீதிவான் கருதினால், அவ்வித மான ஆதனம் முழுவதையும் அச்சங்கத்தின் நம் பிக்கைப்பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கும்படியும் அவ்விதம் சட்டவிரோதமமாகச் செலவு செய்யப் பட்ட அல்லது கொடாது வைத்திருக்கப்பட்ட பணத் தை அவர்களிடம் கொடுக்கும்படியும், அவ்வகை யான உத்தியோகத்தருக்கு அல்லது உறுப்பினருக் குக் கட்டளையிடுவார்.

(2) அந்த முறைப்பாடு செய்யப்படும் அத் தேதியில் அந்த முறைப்பாட்டுக்காரன் எதனுடைய ஆதனத்தின் விடயத்தில் அவ்வித முறைப்பாடு அவ்வண்ணம் செய்யப்படுகிறதோ அதாகிய அந்தப் பதிப்பட்ட தொழிற் சங்கத்ன் ஓர் உறுப்பினராய் இருக்கிறாரென அந்த நீதிவான் திருப்தியடைந் தாலல்லாமல், (1)ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப் படும் ஒரு முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படமாட் டாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் இடப்பட்ட கட்டளை யாற் கட்டுண்ட ஆள் எவரும் அவ்வித கட்டளையிற் குறித்துரைக்கப்படும் காலத்துக்குள் அதன் நியதி களுக்கும் அதிற் கொடுக்கப்பட்ட பணிப்புகளுக்கும் இணங்கியொழுகத் தவறினால், தவறொன்றுக்குக் குற்றவாளியாவாரென்பதுடன், ஒரு நீதிவானால் நடாத்தப்படும் சுருக்க விசாரணையின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐநூறு ரூபாவுக்கு மேற் படாத ஒரு குற்றப்பணத்துக்கு ஆளாவார்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒரு கட்டளை, அவ்விதமான உத்தியோகத்தர் அல்லது உறுப்பினர் ஒருவருக்கெதிராக வைக்கப்படும் குற்ற வியல் அல்லது குடியியல் வழக்கைப் பாதிக்கவோ அல்லது தடுக்கவோ மாட்டாது.

தொழிற் சங்கங்களைப் பற்றிப் பொய்யான தகவல்களைக் கொடுத்தல்.

55. பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் உறுப் பினரொருவருக்கு அல்லது அவ்வகையான தொழிற் சங்கதில் ஓர் உறுப்பினராக வர உத்தேசிக்கும் அல்லது விண்ணப்பிக்கும் ஆள் எவருக்காவது, அது அப்போதைக்கு வலுவிலிருக்கும் அவ்வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான விதிகளின் அல்லது மாற்றங்களின் ஒரு சரியான பிரதியல்லவென அவர் அறிந்துகொண்டும் அல்லது அவ்விதம் அவர் எண்ண நியாயமிருக்கவும், அத்தொழிற் சங்கத்தின் விதிகளின் அல்லது அவைகளில் ஏற்பட்ட ஏதாவதொரு மாற்றத்தின் பிரதியெனக் கொள்ளப்படும் ஏதேனும் ஆவணத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் கொடுக்கின்ற ஆள் ஒருவர் அல்லது, அவ்வகையான விதிகள் பதியப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் விதிகளெனப் பாசாங்கு செய்து பதிவுபெருத ஒரு தொழிற் சங்கத்தின் விதிகளெவற்றின் ஒரு பிரதியை அதேபோன்ற நோக்கத்தோடு எவருக்கும் கொடுக்கின்ற ஆள் ஒருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாவரென்பதுடன் ஒரு நீதிவானுல் நடாத்தப்படும் சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஏதாவது காலத்துக்கான இரு வகையான மறியலில் ஒரு வகையான மறியலுக்கு அல்லது அவ்வகையான குற்றப்பணம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவார்.

விவரத்திரட்டுகள் முதலியவை தொடர்பாகக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்தொழுகாமைக்கான தண்டம்.

56. இக்கட்டளைச்சட்டத்தினுற் தேவைப்படுத்தப்பட்டவாருக ஏதாவது செயலைச் செய்தலில், அல்லது ஏதாவது அறிவித்தல் கொடுத்தலில் அல்லது ஏதேனும் கூற்று, விவரத்திரட்டு அல்லது வேறு ஆவணம் அனுப்புதலில் பதியப்பட்ட தொழிற் சங்க மேதாவதின் சார்பில் தவறு செய்யப்பட்டால், அச்செயலைச் செய்ய, அல்லது அவ்வித அறிவித்தலைக் கொடுக்க, அல்லது அவ்வித கூற்றை அல்லது கொடுக்க, அல்லது அவ்வித கூற்றை அல்லது விவரத்திரட்டை அல்லது ஆவணத்தை அனுப்பிவைக்க, அத்தொழிற் சங்க விதிகளின்படி அல்லது இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி அல்லது அதன்கீழ ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின்படி கட்டுப்பட்ட உத்தியோகத்தர் அல்லது வேறு யாரேனும் ஆள் ஒவ்வொருவரும், அல்லது அவ்வகையான உத்தியோகத்தர் அல்லது வேறெருவர் இல்லாவிட்டால், பதியப்பட்ட அத்தொழிற் சங்கத்தின் நிறைவேற்று குழுவின் உறுப்பினரொவ்வொருவரும்

தனித்தனியாகத் தவறொன்றுக்குக் குற்றவாளிகளாவார் என்பதுடன், ஒரு நீதிவானால் நடாத்தப்படுசு பருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாததோர் குற்றப்பணத்துக்கு ஆளாவார்.

பொதுவான தண்டம்.

57. (1) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடெதையாவது அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் எந்த ஒழுங்குவிதியையாவது மீறும் எவராயினும் அல்லது தொழிற் சங்கமெதாயினும் தவறொன்றுக்குக் குற்றவாளிகளாவர் என்பதுடன் ஒரு நீதிவானால் நடாத்தப்படும் சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் அவ்வகையான தவறுக்கு வேறேதும் தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலன்றி, நூறு ரூபாவுக்கு மேற்படாததோர் குற்றப்பணத்துக்கு ஆளாவார்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படாத ஒரு தொழிற் சங்கம் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இக்கட்டளைச்சட்டம் தொடங்கியபின்னர் எக்காலத்திலாவது அத்தொழிற் சங்கத்தின் நிறைவேற்று குழுவில் ஓர் உறுப்பினராக இருந்திருப்பதாக எண்பிக்கப்பட்ட ஒவ்வொருவரும், அத்தொழிற் சங்கம் எந்தத் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதோ அந்தத் தவறைச் செய்தவர்களாகத் தனித்தனியே மதிக்கப்படுவர்; அந்த நீதிவானும் அவசியமான விசாரணைக்குப் பின்னர் அவ்விதம் தவறு செய்தவராக மதிக்கப்படும் ஒவ்வொருவரின் பெயரையும் தன்னுடைய தீர்ப்பிலும் தண்டனையிலும் வெளிப்படுத்தி சட்டத்திற்கிணங்க அவருக்குத் தண்டனைத்தீர்ப்பு வழங்குதல் வேண்டும்.

வழக்குரைத்தலைக் கட்டுப்படுத்தல்.

58. சட்டத்துறைத் தலைமையதிபதியால் அவருடைய வேண்டுகோளின் பேரில், அல்லது எழுத்து மூலமுள்ள அவரது சம்மதத்துடனேயன்றி இக்கட்டளைச்சட்டத்தின்கீழான எந்த வழக்கும் தொடரப்படலாகாது.

59. இந்தக் கட்டளைச்சட்டத்திலே குறிப்பாக வரைவிலக்கணங்கூறப்பட்டும் ஏற்பாடு செய்யப்பட்டிமிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் தவறுகளும், தண்டங்களும் எழுத்துமூலமுள்ள வேறேதும் சட்டத்திலே வரைவிலக்கணங் கூறப் பட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுமிருப்பவைகளுக்கு மே லதிகமானவையேயன்றி அவற்றிற்குப் பதிலானவையல்ல.

எழுத்திலுள்ள வேறு சட்டங்களின் கீழ் செய்யப்படும் தவறுகளுக்குப் பேணுதல் அளித்தல்.

பாகம் XI

**பல்லினமானவை**

**60.** (அ) பங்காளருக்கிடையே அவர்களுடைய சொந்தத் தொழில் பற்றிய உடன் படிக்கை எதனையும்; அல்லது

(ஆ) தொழில்தருநரொருவருக்கும் அவ ரால் தொழிலுக்கமர்த்தப்பட்டவர் களுக்குமிடையில் அவ்வகையான தொழில் பற்றிய உடன்படிக்கை எதனையும்;

(இ) ஒரு வியாபாரத்தின் வியாபார உரி மையை விற்பதற்காக ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையை அல்லது ஏதாவது தான்புரிதொழில் அல்லது வியாபா ரம் அல்லது கைப்பணியைப் போதித் தற்காக ஏற்பட்ட ஓர் உடன்படிக்கை யை,

இந்தக் கட்டளைச்சட்டம் பாதிக்கமாட்டாது.

குறித்தசில உடன்படிக்கைகளை இக்கட்டளைச்சட்டம் பாதிக்காமை.

**61.** பின்வரும் கட்டளைச்சட்டங்கள், அவையாவன

(அ) கம்பனிகள் கட்டளைச்சட்டம்,

(ஆ) சங்கங்கள் கட்டளைச்சட்டம்,

(இ) வியாபார பெயர்கள் கட்டளைச்சட்டம்,

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச்சட்டம்

குறித்தசில கட்டளைச்சட்டங்கள் தொழிற் சங்கங்க ளுக்கு ஏற்புடையன வாகாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியன தொழிற் சங்கம் எதற்கும் ஏற்புடையன வாகவிருக்கா; அந்தக் கட்டளைச்சட்டங்களில் எதன் கீழும் தொழிற் சங்கமெதையும் பதிதல் வறிதான தாகும்.

சட்டமன்றுணை சேர்ப்பித்தல்.

**62.** ஏதாவது குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில் ஒரு தொழிற் சங்கத்துக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டிய அழைப்புக்கட்டளை அல்லது அறிவித்தல் அல்லது வேறு ஆவணம் ஒவ்வொன் றும் அது அத்தொழிற் சங்கத்தின் பதியப்பட்ட அலுவலகத்திற் கொடுபட்டால் அல்லது அத்தொழிற் சங்கத்தின் தலைவர் அல்லது பொருளாளர் அல்லது செயலாளர் அல்லது எவரேனும் உத்தியோகத் தரிடம் நேரே ஒப்படைக்கப்பட்டால், அவ்வொப் படைத்தல் வேறுவிதங்களில் எழுத்துமூலமுள்ள கட்டளைச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைவாக விருக்குமாறல் முறையாக ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

## முதலாம் அட்டவணை

( பிரவு 38 )

### பதியப்பட்ட தொழிற் சங்கம் ஒவ்வொன்றினதும் விதிகளில் ஏற்பாடுசெய்யபடவேண்டிய கருமங்கள்

**1.** அத்தொழிற் சங்கத்தினது பெயரும், அத் தொழிற் சங்க அலுவல்களை நடாத்துவதற்காகக் கூடும் இடமும்.

**2.** எவற்றிற்காக அந்தத் தொழிற் சங்கம் தாபிக்கப்படுகிறதோ அந்தக் குறிக்கோள்கள் முழு வதும், அதன் நிதிகள் எவற்றிற்காகப் பயன்படுத் தப்படுகின்றனவோ அந்த நோக்கங்களும், அத னுடைய உறுப்பினர் ஒருவர் அதனால் உறுதி சொல்லப்பட்டும் நன்மைகளைப் பெற உரித்துடையவர் ஆவதற்கு ஒருவர் பொருந்தவேண்டிய நிபந்தனை களுக்கும் அதன் உறுப்பினர் ஒருவர் மேல் விதிக் கப்படக்கூடிய குற்றப்பணங்களும், பறிமுதல்களும்.

**3.** விதிகளை ஆக்கும் முறையும், மாற்றும் முறை யும், திருத்தும் முறையும், நீக்கும் முறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அத்தொழிற் சங்கத்தின் நிறைவேற்று குழுவையும், நம்பிக்கைப்பொறுப்பாளரையும், செயலாளர்களையும், பொருளாளர்களையும், வேறு உத்தியோகத்தர்களையும் நியமித்தல் அல்லது தெரிதலும் நீக்குதலும்.

5. அத்தொழிற் சங்கத்தின் நிதிகளைப் பாதுகாத்தலும், முதலீடு செய்தலும், அதற்குப் பொறுப்பாளியாகவுள்ள உத்தியோகத்தரின் அல்லது உத்தியோகத்தர்களின் பதவிபெயரும், அதன் கணக்குகளை ஆண்டுதோறும் அல்லது காலத்துக்குக் காலமேனும் பரிசோதனைசெய்தலும்.

6. அத்தொழிற் சங்கத்தின் புத்தகங்களும், அங்கத்தவர்களின் பெயர்களும் அத்தொழிற் சங்கத் சங்கத்தின் நிதிகளில் அக்கறையுடைய எவராலாவது சோதனை செய்யப்படுதல்.

7. அத்தொழிற் சங்கத்தைக் குலைக்கும் முறையும் அவ்விடம் குலைக்கப்படும் நேரத்தில் உள்ள அதன் நிதிகளைக் கையாளுதலும்.

இரண்டாம் அட்டவணை

படிவம் 1

**அரசியல் நிதித்கு பணவுதவி அறிவித்தற் படிவம்** **விதி 47 (5)**

**அரசியல் நிதிகுப் பணவுதவி அறிவித்தல்**

தொழிற் சங்கத்தின் பெயர்: ..............

..................ஆகிய நான் மேற்குறித்த தொழிற் சங்கத்தின் அரசியல் நிதிக்குப் பண உதவி செய்ய விரும்புகிறேனென்றும், உடன்படுகிறேனென்றும் இதனால் அறிவிக்கிறேன்; அதன் பயனாக அந்த நிதிக்குப் பணவுதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறேனென்றும், அவ்வுதவி செய்வதை விட்டுவிட்டேனென்று எழுத்தின்லான ஓர் அறிவித்தலை அச்சங்கத்தின் அலுவல

கத்தில் நான் சமர்ப்பித்தாலன்றி, அவ்விதந் தொடர்ந்து உதவக் கடமைப்பாடுடையேனுவேன் என்றும் விளங்கிக்கொள்ளுகிறேன்.

(ஒப்பம்) அ..ஆ.

முகவரி: ..................

கொடுக்கும் தேதி: ........................

உறுப்புரிமை எண் (ஏதாவது இருந்தால்): ......

படிவம் 2

**அரசியல் நிதிக்குப் பணவுதவி**

**நிறுத்தலறிவித்தற் படிவம்**

**அரசியல் நிதிக்குப் பணவுதவி நிறுத்தலறிவித்தல்**

தொழிற் சங்கத்தின் பெயர்: ..............

.................ஆகிய நான் மேற்கூறித்த தொழிற் சங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அச்சங்கத்தின் அரசியல் நிதிக்குப் பணம் உதவ எனது விருப்பத்தைத் தெரிவித்து என்னுற் கொடுக்கப்பட்ட அரசியல் நிதிக்குப் பணவுதவியறிவித்தலை திருப்பிப் பெற்றுக்கொள்ளுகிறேனென்பதை இதனுல் அறிவிக்கின்றேன்; மேலும், இச் சங்கத்தின் பதியப்பட்ட அலுவலகத்தில் பணமுதவும் இன்னுமோர் அறிவித்தலைச் சமர்ப்பித்தாலன்றி, இச் சங்கத்தின் பதியப்பட்ட அலுவலகத்தில் இந்த அறிவித்தல் கொடுபட்ட தேதியிலிருந்து இச்சங்கத்தின் அரசியல் நிதிக்குப் பணவுதவி செய்ய நான் கடமைப்படமாட்டேனென்பதையும் விளங்கிக் கொள்கிறேன்.

(ஒப்பம்) அ.ஆ.

முகவரி: ..................

கொடுபடும் தேதி: ........................

உறுப்புரிமையெண் (ஏதாவது இருந்தால்): ........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணரட்ன அன் கொம்பனி, லிமிட்டெட். கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org